...ழியட்டுமே!

...ராவிடம்.

...நாராயணன்

R34
N48
108672



இளம் எழுத்தாளரும், சிறந்த பேச்சாளரும்,
துறையூர் கருஞ்சட்டைப் படை
காரியதரிசியாக பணியாற்றியவரும்
இந்நூலின் ஆசிரியருமாகிய

**தோழர் து. வீ. நாராயணன்**

# அழியட்டுமே திராவிடம்!

★

எழுதியது :

துறையூர் - நாராயணன்.

★

புரட்சிப் பதிப்பகம்,

துறையூர் :: திருச்சி Dt.

புரட்சிப் பதிப்பக வெளியீடு 1.

இரண்டாம் பதிப்பு C. 1000

விலை அணா எட்டு.

R34
N48

# நினைவு

திராவிடர் கழகத்திற்கு உழைப்பதையே
தன்னுடைய
வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு
தொண்டாற்றி, அதன் காரணமாக
13-11-47உ காலை 6-மணிக்கு
ஆரியக்கூட்டத்தினராலும்
அவாகளுக்கு அடிவருடும் சில
விபீஷணர்களாலும்
**கொலை செய்யப்பட்டு உயிர் நீத்த**
உடையார்பாளையம் போர்டு பள்ளியின்
ஆசிரியர், உயர்திரு

**எஸ். வேலாயுதம்**

அவாகளுக்கு.

—து வீ நாராயணன்.

ஸ்ரீ நடராஜா பிரஸ், துறையூர்

# முன்னுரை.

தமிழ் நாட்டிலே - சிறப்பாக இளைஞருலகில் - நல்ல விழிப்பு ஏற்பட்டிருக்கிறது.

தமிழர் சமுதாயத்தில் நிலவியுள்ள அறிவுத் தேக்கம் கொஞ்சம் கொஞ்சமாக நீங்கி, பகுத்தறிவுப் பாதையிலே முன்னேறி வருவதன் சாயைகள் அவ்வப்போது தெரிகின்றன.

என்றாலும், பொதுவாக நோக்கினால், நாட்டு நிலைமையை, சமுதாய நடைமுறைகளை, மக்களின் வாழ்வை ஆராய்ந்தால், உழைப்போருக்கு உற்சாகம் எழுவதில்லை; சிந்தனையாளர்களுக்கு மகிழ்வு பூப்பதில்லை; அறிஞர்களின் அகம் மகிழ்வதில்லை; புது மலர்ச்சியை - புதுயுக உதயத்தை - எதிர்நோக்கும் இளைஞர்களுக்கு திருப்தி ஏற்படுவதில்லை.

இன்றுகூட, அறிவும், திறமையும் சமாதிகட்டியே பூஜிக்கப் படுகின்றன. மனிதநிலை உயரவேண்டும் என விரும்புகிறவர்கள் செத்துக்கொண்டுதான் வாழவேண்டியதாகிறது. லட்சிய வாதிகள் உழைத்து, உடல்சோர்ந்து, உளம்சோம்பி, செயலற்ற வர்களாகி விடுகிறார்கள். ரொம்ப நல்லவர்களாக வாழ்கிறவர்கள் சாகத்தான் நேரிடுகிறது — சாவையே பரிசாகப் பெறுகிறார்கள். உழைப்புக்கும் திறமைக்கும் உண்மைக்கும் மதிப்பில்லை. வெளிச்சம் போடுகிறவர்களும், பதவிப்பித்தேறித் திரிகிற பம்மாத்துக் காரர்களும், சுயநலமிகளும் தங்கள் நலனுக்காக மற்றவர்களைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

இன்றைய நிலைமையைப் பார்க்கும்போது. இந்த மனித சமுதாயம் உருப்படுமா என்ற சந்தேகம் எழுவது இயல்பு. உலகச் சிந்தனையாளர்களுள் ஒருவரான எச். ஜி. வெல்ஸ் இறப்பதற்கு முன்பு எழுதிய நூலில் இப்படித்தான் குறிப்பிடுகிறார்: "மனித வர்க்கம் உருப்படப்போவதில்லை. நாசகாரப் பாதையிலேயே உழன்றுகொண்டிருக்கிறது. மனித மனம் தனது செயல் முடிவை எய்திக்கொண்டிருக்கிறது".

பேரறிஞர் பெர்னாட்ஷா முன்பே குறிப்பிட்டிருக்கிறார்: "சிருஷ்டி சக்தி உயிர்களைக் கொண்டு பலவிதமான சோதனைகள் புரிந்து வருகிறது. அந்த முயற்சியில் பிந்தியதுதான் மனித

வர்க்கம். மனிதவர்க்கமும் தனது ஆசையைப் பூர்த்தி செய்ய வில்லை என்று சிருஷ்டி சக்தி உணருமானல், சிருஷ்டியின் ஆரம்ப காலத்திலிருந்த ராக்ஷஸ மிருகங்களை அழித்துவிட்டதுபோல; மனித குலத்தையும் ஒழித்துவிடும் படைப்புச் சக்தி''.

மனிதவர்க்கம் இவ்விதம் நாசமுறுவதைத் தடுத்து, உயிர்க் குலம் உயர்வதற்காகப் பாடுபடுகிறார்கள் சிந்தனையாளர்கள். அதி மனிதர்கள் தோன்றவேண்டும் என்பது நீட்ஷே முதல் இன்று வரையுள்ள சிறந்த சிந்தனையாளர்களின் ஏக்கம்.

அதிமனிதன் குணம் பெறுவதற்கு முன்னல், மனிதன் மனிதனாக வாழக் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியம். உணர முடியாமல் போனாலும் கூட, நல்ல நிலையிலாவது வாழ்ந்து, நாட்டுக் கலாசாரத்தைப் போற்ற வேண்டும். அதில்லாமல் நாசமுறும் லீலைகளே புரிந்து வருவதானல், மனித வர்க்கம் மிருகத்தனமாக வாழ்ந்து சீரழிவதைவிட, மடிந்து மண்ணுவதே நல்லது. இன்றைய இழிநிலையைக் கண்டு மனம் புழுங்குகிறவர்கள், மனித வர்க்கத்திடம் கொண்ட நம்பிக்கையை இழந்து விட்டவர்கள், 'மனித வர்க்கம் அடியோடு ஒழிக!' என்றுதான் கூறுவார்கள்.

புதுயுகம் காண விரும்புகிறவர்களும் அப்படித்தான் கூற முடியும். 'மாறு அல்லது மாண்டு போ' இதுதான் அறிவுலகம் பழமைக்கு விடும் சவால். இளைஞர்கள் முதுமைக்குக் கொடுக்கும் சாவோலை.

இதைத்தான் நண்பர் து. வீ. நாராயணன் உணர்ச்சிகரமாக எடுத்துச்சொல்லியிருக்கிறார். சிந்திக்கும் திறனிருந்தும் சிந்தனை புரியும்படி தூண்டியும் கூட - சிந்திக்காத, சிந்திக்க விரும்பாத குள்ள மனத்தினரைச் சொல்கொண்டு தாக்கியிருக்கிறார்- தம் நிலையை உயர்த்த விரும்பாமல் பிறரது அடிவருடிகளாகவே வாழ்கிறவர்கள், சமுதாய முன்னேற்றத்துக்கு ஆவன செய்யாமல் புல்லுருவிகளாகத் திரிகிறவர்கள், கறையான் கும்பல்கள் இவர்கள் பாரம்பரையிலே பெருத்து வருகிற திராவிடம் அழிந்து தொலையட்டும் என்று உள்ளக் கொதிப்போடு அனல் நடையிலே தீட்டியிருப்பது சிந்திக்கத் தூண்டும் விஷயம். துணிச்சலான கருத்தும்கூட.

இன்று நாட்டிலே இளைஞரிடையே பரவியுள்ள உணர்ச்சியை, ஆர்வத்தை ஒருமுகப்படுத்தி, நல்ல திட்டம் வகுத்துத் திறமையாகச் செயலாற்றினால், இன்றையத் திராவிடம் இன்பத் திராவிடமாய், இனிய பொன்னாடாய் திகழமுடியும். ஆனால் இன்றைய தமிழகத்திலே பல்வேறு கட்சிகள்; ஒரே குறிக்கோளுக்கு விதம் விதமான சாயம் பூசி; தாங்கள் தலைவராக வேண்டும் என்பதற்காகத் தனிக் கட்சி வகுத்து கூச்சல் போடுகிறவர்கள்; சுய சிந்தனையை மழுங்க விட்டு அயல் நாட்டின் அரசியல் சூழ்ச்சிகளுக்குத் தலை வணங்கும் அரோகராக் கூட்டங்கள் பெருகிவிட்டன. இவர்கள் தங்களுக்குள் க்மரிடுவதும் வசைமாரி பொழிவதும்; சூழ்ச்சிகள் புரிவதுமாக நாளோட்டுகிறார்களே தவிர நாட்டுக்கு நல்லது செய்யவில்லை. இவர்கள் ஒன்றுபட்டு சரியான வழி வகுத்தால்தான் விமோசனம் ஏற்படும். அல்லது, இவர்களை எல்லாம் அடக்கி நாட்டுமக்களுக்கு நேர்மையான வழி காட்டக்கூடிய சர்வாதிகாரி எவனாவது புதிதாகத் தோன்ற வேண்டும்!

இல்லையெனில், நண்பர் நாராயணன் சொல்வது போல 'அழியட்டுமே திராவிடம்' புதுயுகம் பூப்பதற்காக; புதியதோர் சமுதாயத்துக்கு இடமளிப்பதற்காக!

சிந்திக்கத்தெரிந்த இளைஞர், உணர்ச்சி செழிந்த உள்ளத்தினர், உழைக்கின்ற தொழிலாளி, இன்றைய இளைஞருலகின் பிரதிநிதி தோழர் து. வீ. நாராயணனின் இந்நூல் சிந்தித்துச் சிந்தித்து உளம் குமுறுகிற இளைஞர்களின் எதிரொலியாகும் உள்ளத்து உணர்ச்சிகளை அழகாக, தெளிவாக, காரசாரமாக எழுத்தாக்கி யிருக்கிறார். அவருக்கு எனது பாராட்டுதல்கள்.

அறிவை அடகு வைத்துவிடாதவர்களும் சிந்தித்துச் சிந்தித்துச் விடை காண விரும்புகிறவர்களும் இந்நூலைப் போற்றுவார்கள் - வரவேற்பார்கள் என்பது திண்ணம்.

சாந்தி நிலையம்,
சென்னை 2.

**வல்லிக்கண்ணன்**

# எனது எண்ணம்

கருஞ்சட்டையினருக்குத் தடை உத்திரவு; அது சட்டவிரோத மான ஸ்தாபனம்......

விஞ்ஞானத்தின் விளைவுகள் அதிகமாகி மதத்தின் மடத்தனங்கள் மடையர்களால் சிருஷ்டிக்கப்பட்டது என மக்களால் மதிக்கப்பட்டு வரும் இக்காலத்திலே-- ஆயிரக்கணக்கான வருடங்களுக் கொருமுறை பிறக்க வேண்டிய கர்ம வீரர்களின் வழிவந்த பெரியார் காந்தியார் மதவெறியின் கொடுமையால் சுட்டுக்கொல்லப்பட்ட இக்காலத்திலே--கடலைத் தாண்டாதே, கப்பல் ஏருதே என எழுதிவைத்த உஞ்சிவிருத்திக் கூட்டங் கள். தாங்கள் எழுதிவைத்ததையே கூட மதிக்காது உலகத்தையே வட்டமிட்டுத் திரியும் இக்காலத்திலே-இதோ, மதத்தைக் கண்டித்து-மத அரக்கனிடமிருந்து மக்களை விடுவித்து-அவர்களிடையேயுள்ள உயர்வு-தாழ்வுகளை உதறித் தள்ளச் சொல்லி ஜாதி-மதபேத மற்ற ஒரு தனியரசை ஸ்தாபிக்க முயன்று வரும் கருஞ்சட்டையினருக்குத் தடை உத்திரவு.

தமிழர்கள், தமிழர்களின் முன்னேற்றத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட கருஞ்சட்டைப் படைக்கு தமிழன் மந்திரிசபை தடை விதிக்கிறது.

இந்த மானமிழந்த நாடு வாழத்தான் போகிறதா? வாழத்தான் முடியுமா? கருஞ்சட்டைப் படைக்குத் தடை உத்திரவு என்ருல்இந்த நாட்டின் அறிவு வளர்ச்சிக்குத் தடை என்றல்லவா பொருள்!

எங்களது ராமராஜ்யத்திலே நெருப்பு சுடாது.நீர் குளிராது தெருவெல்லாம் பாலும் தேனும் வழிந்தோடும் என்றெல்லாம்கூறி மக்களின் உத்வேகத்தை ஒன்று திரட்டி இந்த சுதந்திரராஜ்யத்தை ஸ்தாபிக்கச் செய்த காங்கிரஸ் திராவிடத்தோழர்களும் தங்கள் ஆட்சி யிலே தனி மனிதன் சுதந்திர உணர்ச்சிகூட நசுக்கப்படுவதைக்கண்டு வாளாவிருக்கின்றனர்......

உறங்கிக்கொண்டிருந்த ஜெர்மனியிலே சுரண்டிக்கொண்டிருந்த யூதக்கூட்டத்தின் ஆதிக்கத்தை வேரோடு களைய திட்டமிட்டுச் செய லாற்றினுன் ஹிட்லர் அவனது முயற்சியை யூதக் கூட்டம் எதிர்த்ததே தவிர ஒரு ஜெர்மனியன் கூட எதிர்க்கவில்லை.

ஆனுல் இந்த நாட்டிலே ?.........

ஜெர்மனியை சுரண்டிக்கொண்டிருந்த யூதக் கூட்டத்தைப் போலவே இந்நாட்டைச் சுரண்டி வாழ்கிறது ஆரியக்கூட்டம். அதனை ஒழிக்க தலைவர் பெரியார் முற்படும்போது நமக்கு முதல் எதிரியாக முன்னே நிற்பவன் யார்?...... ஆரியனு?...... இல்லை, இல்லை...... நம்முடைய சகோதரத் தமிழன்.

பெரியார் காந்தியவர்கள் மதவெறியினுல்-பார்ப்பனர்களால் கொல்லப்பட்ட பிறகும்கூட இந்த மகானுபாவர்களுக்கு அறிவு வரவில்லை யென்ருல். மதத்திற்கும் பார்ப்பனீயத்திற்கும் இந்த மந்திரி சபை வக்காலத்து வாங்குகிறதென்ருல் 'ஏ' மானங்கெட்ட திராவிடமே! நீயும் அழிந்து போ; உன் மக்களும் அழிந்துபோகட்டும்!' என்று கூருமல் இருக்கமுடியுமா?

அதன் எதிரொலிதான் 'அழியட்டுமே திராவிடம்!'

தி. வீ. நாராயணன்.

# 1

## திராவிடர் கழகத்தைக் கலையுங்கள்!

திராவிடர் கழகத்தைக் கலையுங்கள்! ஆம்! கலைத்தே விடுங்கள்!

கோடிக்கணக்கான திராவிட மக்களின் உழைப்பை உறிஞ்சி, அவர்களின் வியர்வையிலே குளித்து, அவர்களின் ரத்தத்தை நீராக அருந்தி அவர்களின் எலும்புக் கூடுகளால் கட்டப்பட்ட மாளிகையிலே வசித்து இன்னமும் மேனி மெருகு கெடாது வாழ்ந்து வரும் ஆரியக் கூட்டத்தை அழித்தொழிக்க அரும்பாடு பட்டுவரும் திராவிடர் கழகத்தைக் கலையுங்கள்!

முணுமுணுப்பை முழக்கமாக மாற்றி எழுச்சிப் போர் புரிய எத்தனிக்கும் ஏழைத்தொழிலாளியிடம் 'விதி' என்ற சதிச்சொல்லைச் சுட்டிக்காட்டி, அவர்களின் எழுச்சிக்குத் தடைகள் விதித்து தங்கள் இன்பத்தை அவர்களின் துன்பத்தின்மேல் நிறுவி 'கூழுக்கு உப்பில்லையே' என அவ்வேழைத் தொழிலாளிகள் குடிசைகளிடையே கூக்குர லிடும்போது இன்ப வல்லியின் இடையிலே தனது இடது கரம் இருக்க, தனது இரு செவிகளும் இன்னிசை விருந்துண்ண தமது மதியையும் மனதையும் மதுவிலே செலுத்தி-மமதை கொண்டு-மெய் மறந்து கிடக்கும் முதலாளி வர்க்கத்திற்குச் சாவுமணி அடிக்கும் திராவிடர் கழகத்தைக் கலையுங்கள்!

ஏழை மக்களின் உதிரத்தை உறிஞ்சி வாழும் மூட்டைப் பூச்சிகளாம் முதலாளி வர்க்கத்தின் கோர இரும்புப் பிடியில் சிக்குண்டு, சீரழிந்து 'காப்பாரில்லையே' எனக் கலங்கி காலையிலிருந்து மாலைவரை இயந்திரத்திேைடு இயந்திரமாய் எலும்புருகப் பாடுபட்டுப் போதிய பலனைக் காணுது வெறுங்கையோடு வெளியே வந்து, எதிரே வளைந்து வளைந்து செல்லும் ரஸ்தாவைக் கண்ணுக்கெட்டிய தூரம் வரைப்பார்த்தும் பரவசமடையாமல் அதற்கப்பாலும் பார்க்க முயலும் பஞ்சடைந்த-குழி விழுந்த கண்களோடு தன் குடிசையை நோக்கித் தள்ளாடித் தள்ளாடி நடந்து செல்லும் ஏழைத்தொழிலாளியை வாழ்விக்க வந்த திராவிடர் கழகத்தைக் கலைபுங்கள் !

'மடமுண்டு ஏமாற்றி வாழ்வோம்' என்றெண்ணிடும் ரமண ரிஷிகள், மதுக்கோப்பையும் மங்கையுமே இன்பமெனக்கொண்டு ஆடலழகிகளின் அதரங்களையே சுவைத்து மெய்மறந்து கிடக்கும் மாமிசப் பர்வதங்களாகிய மடாதிபதிகள், காவி உடையணிந்தோர், கமண்டலமேந்திகள், மொட்டைத் தலையினர், கொட்டைக் கட்டிகள், திருநாம தாரிகள், துளசியணிபவர் இன்னேரன்ன பிற பிற்போக்காளர்களுக்கு ஒரே மூச்சாக சாவோலை தீட்டிக்கொண்டு வரும் திராவிடர் கழகத்தைக் கலையுங்கள் !

அறியாமைக்கும், ஆரியம்புகுத்திய காட்டுமிராண்டிக் கொள்கைகளுக்கும்-அதன் ஆதிக்கத்துக்கும்-குழி தோண்டுங்கள் என்று முரசறைந்து கூறும் திராவிடர் கழகத்தை, எடு தாங்கிகள், எடுபிடி ஆட்கள், 'பிடி சாபம் என்பவர்கள், துடியிடையாளின் உடலழகை எழுதிப் பிழைப்ப

வர்கள் இன்னோன்ன பிற பழமை விரும்பிகளுக்குச் சமாதி கட்டும் திராவிடர் கழகத்தை—தானும் பேசாமல், தன்சிஷ்யகோடிகளையும் பேசச்சொல்லாமல் மௌனத்தின் சாயலிலேயே உலக மக்களை மயக்கி, அவர்களின் உழைப்பை தங்களின் உல்லாச வாழ்வுக்கு உரமாக அமைத்துக் கொண்டு வாழும் அரவிந்தர்களை 'கட்டுங்கள் உங்கள் மூட்டைகளை' என்று உத்திரவு போடாமல் போடும் திராவிடர் கழகத்தை—'கஞ்சி வரதப்பா' என்றால் 'எங்கு வரதப்பா' என்று கேட்கக்கூடிய நிலைமைக்கு இந் நாட்டிலே பிச்சைக்காரர்களை உண்டாக்கிவிட்டு தான் மட்டும் வாழ வழி வகுத்துக்கொண்டு உயர் வாழ்வு வாழும் மதவாதிகளைக் கண்டு மயங்காதீர், மருட்சி யடையாதீர் என வீரஉரையாற்றும் திராவிடர் கழகத்தைக் கலையுங்கள்!

'அச்சுத் தொழிலே....நச்சுத் தொழிலே' என்று தன் தொழிலை தானே இகழ்ந்துகூறிவிட்டு, அதனை விட்டுச் செல்ல வேறு வழியின்றி தன் கண் ஒளியைப் பொன்னாக வும் அதன் ஒளியாகவும் மாற்றி தன் முதலாளி வீட்டு நாரீபணிகளை நகைகளால் பூட்டி மகிழச்செய்துவிட்டு, தனது மனைவி மக்களைப் பார்த்து உலைக்கூடத்தின் துருத் தியை விட வேகமாகப் பெருமூச்சு விடும் 'அன்றாடம் காய்ச்சி' அச்சுத்தொழிலாளி — காயும் கதிரோன் எழுமுன்னே-விண் மீன்கள் கண்சிமிட்டி விளையாடும் வேளையில்-எழுந்து, கண் கசக்கி, தான், கசக்கி அறியாத கந்தை இடையிலே துவள, ஒழுகும் பனியைத் தாங்க உடலிலே வேறு துணியின்றி,

தோளிலே தொங்கும் கலப்பை உடலோடு சேர்த்து கீழே அமுக்க, கூனிக் குறுகி எலும்புயர்ந்து கிடக்கும் முது கிலே நீர் இறைக்கும் சால் உருய்ந்து உருய்ந்து ரத்தம் கசிய, இரவு முழுதும் பட்டினி கிடந்து, காய்ந்துக் கருகித் தள்ளாடி நடந்து செல்லும் எலும்புக் கூடுகளான காளை மாடுகளின் கயிர், கடமைக்காக கையிலே தொங்க, பசி யின் காரணமாக வாடி வதங்கிச் செல்லும் அம்மாடுகள், பச்சைப் பசேலென்று இருபுறமும் இருக்கும் மணிக் கதிர்களைக்கண்டு தாவி ஓடி இரு புறமும் இழுக்க, எண்ணெய் காணுத பரட்டைத் தலையோடு, குழி விழுந்த கண்களோடு, வறண்ட நாவோடு, வற்றிய உடலோடு

'உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு'

என்று யாரோ ஒரு மடையன் எழுதிவைத்துவிட்டுச் சென்றுனே என்று தனது தொழிலை உயர்த்திக் கூறிய அறிஞனை தூற்றிக்கொண்டே நடைப் பிணம் போல நடந்து செல்லும் ஏழை விவசாயி,

'செய்யும் தொழிலெல்லாம் சீர் தூக்கிப்பார்க்கின்
நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை கண்டீர்'

என்று கூறிய அறிஞனின் வார்த்தையை நம்பி, தன்னிக ரற்றதாகக் கூறப்படும் அத்தொழிலிலே தாவிக் குதித்து, அதன் காரணமாக, வறுமையையும் வாட்டத்தையும் துணை யாகக்கொண்டு, எண்ணற்ற கவலை இதயத்தை அரிக்க இழைக்கூடத்திலே புகுந்து, ஓய்வின்றி உருமாறும் வரை உழைத்து, மாற்றுனின் மனைவி மக்கள் மானங்காக்க அழ கிய ஆடைகளை நெய்து வாரி வாரிக் கொடுத்துவிட்டு, தன் மனைவி மக்கள் கைகளை மெய்யிலே போர்த்தி, சேலையின்

ஒரு பகுதியை உடுத்திக்கொண்டு மறுபகுதியைத்துவைத்து உலர்த்தும் கேவல நிலேயிலே வாழ்க்கை நடத்தும் தறித் தொழிலாளி, 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்' என்ற அலங்கார வார்த்தைக்கு ஆசைப்பட்டுப் பணத்தைக் கொட்டிப்படித்துவிட்டுப் பராரிகளாய் வாழும் ஆசிரியர் வர்க்கம் இவர்களெல்லாம் விடும் கண்ணீரைத் துடைக்கத் தோன்றிய திராவிடர் கழகத்தைக் கலேயுங்கள்!

ஆம், கலேத்தேவிடுங்கள்! மீண்டும் ஒருமுறை கூறு கிறேன்: திராவிடர் கழகத்தைக் கலேயுங்கள்! மத்திய கழகம் ஒன்றை மட்டுமல்ல, மாணவர் கழகங்கள், வாலிபர் கழகங்கள், இளேஞர் கழகங்கள் அனேத்தையுமே கலேத்து விடுங்கள்.

'கலேத்து விடுங்கள்' என்று நான் கூறும்போது பழமைக்குப் பரிந்து பேசியோ-அறியாமைக்கு ஆதிக்கம் தேட எண்ணியோ-ரத்தவெறி பிடித்தலேந்த மனுவின் மரண சாசனமான 'இந்துமதக் கோட்பாடுகள்' இனியும் வேண்டும் என எண்ணியோ-இதனே நான் கூறவில்லே.

இந்நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைக்கும் ஒரே இயக்கம் திராவிடர் கழகம்; அது இன்றேல் இந்நாட்டில் கொஞ்சமாவது எஞ்சியிருக்கும் தமிழ்க் கலேயில்லே; காவியம் இல்லே; இலக்கியம் இல்லே; இன்னோரன்ன பிற முற் போக்கு சக்திகளுக்கு இடமில்லே; பிறர் முன்னேற தமது முதுகை ஏணியாக அமைத்துக் கொடுத்து வந்த வஞ்சக மற்ற நெஞ்சினர் வாழ வழிதேட எழுந்த எழுச்சிக்கு இடமில்லே; பகுத்தறிவுப் பகலவனிலிருந்து ஒளி விட்டுச்

சிதறும் சிந்தனைப் பொறி வீழ இடமில்லை; எதிர்காலம் என்னும் நகரை நிகழ்காலம் என்னும் விமானத்திலிருந்து சிந்தனை யென்னும் தூரதிருஷ்டிக் கண்ணாடிக் கொண்டு பார்த்து, அதற்கேற்ப இந்நாட்டை நிர்ணயிக்க திட்டங்கள் தீட்டும் தீர்க்க தரிசிகள் உற்பத்தியாக வேறு வழியில்லை. முடிவாகக் கூறுகிறேன்-இன்றைய திராவிடம் அணு அணுவாக அங்குலம் அங்குலமாகவாவது முன்னேறிக்கொண்டிருக்கும் சிறிதளவு முன்னேற்றத்திற்குக்கூட இடமில்லை என்பதை நன்குக உணர்ந்த பின் தான் கூறுகிறேன் 'திராவிடர் கழகத்தைக் கலையுங்கள்!' என்று.

என்.................

---


வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

அகில உலக அரசியல் பித்தலாட்டங்களை அமபலமாககும் அரசியல் நூல்!

தோழர் "சக்திமோஹன்" எழுதிய

**உலகம் உருப்படுமா?** விலை அணு 0-6-0.

உலகத்தின் ஆட்சியெல்லாம ஒரே தலையில் ஏறவேண்டும என்று ஆசைப்படுகிற அணுகுண்டு வாதிகள், ஏகாதிபததிய வெறிபிடித்த வஞ்சக நெஞ்சக் கள்வர்கள் கையில் சிக்கிய உலகம உருப்படுமா?

உருப்படத்தான் வேண்டும! அப்படியானல் என்ன செய்யவேண்டும என்பதைத்தெளிவாக விளக்கியுள்ளார்.

சென்னை 'தமிழ்முரசு' ஆசிரியர்: திரு. ம. பொ சிவஞான கிராமணியார் அவர்களின் சிறந்த முன்னுரையுடன கூடியது.

**தியாகக்கொடி பதிப்பகம்,**

துறையூர். :: திருச்சி ஜில்லா.

# 2

இந்த நாட்டிலே உள்ளவர்கள் மக்களல்ல, வெறும் மாக்கள்! நடைப் பிணங்கள்! சிந்திக்கத் திறமையற்ற சுவற்றுச் சித்திரங்கள்! அறியாமையிலேயே சுழன்று சுழன்று கொண்டிருக்கும் வட்டப் பூச்சிகள்! பழமையென்னும் சாணத்திலே பிறந்து, அதிலேயே உழன்று நெளிந்துகொண்டிருக்கும் சாக்கடைப் புழுக்கள்! புறப்பட்ட இடத்தையே திரும்பித் திரும்பிப் பார்க்கும் பட்டி மாடுகள்! இன உணர்வு இல்லாத நெல்லிக்காய் கும்பல்கள்! பழமைக்குப் பரிந்துபேசுவதிலே குறும்பாட்டு மந்தைகள்! உள்ளமோ, உணர்வோ, சிந்தனையோ, செயலோ ஒன்றுமே இல்லாமல் இயக்கியவிதமே திரும்பத் திரும்ப இயங்கிக்கொண்டேயிருக்கும் இயந்திரக் கூட்டங்கள்! தளதளவெனச் செழித்து வளரும் சிந்தனைக் கதிர்களைக் கண்டால் யோசியாமல் கடித்துத் தள்ளும் வெட்டுக் கிளிகள்! மானிடத் தோல்களைப் போர்த்தி மறைந்து கொண்டு வேஷம் போடும் பகுத்தறிவற்ற மிருகக் கூட்டங்கள்! சுற்றிய இடத்தையே சுற்றிக்கொண்டு வரும் செக்கு மாடுகள்! மேல் மினுக்கை மட்டும் நாகரீகமெனக் கருதி வட்டமிட்டுத் திரியும் பட்டுப்பூச்சிகள்! வைத்த இடத்திலேயே ஆடாமல் அசையாமல் இருக்கும் கொலு பொம்மைகள்! விளக்கைப் பழம் என்று நம்பிப்பாய்ந்துப்பாய்ந்து விளையாடி கண நேரத்தில் வீழ்ந்து மடியும் விட்டில் பூச்சிகள்! அறியாமையின் பிரதிபிம்பங்கள்! அடிமையாக இருக்கவே பிறந்ததாக எண்ணிடும் காவல் நாய்கள்!

ஆம், இந்நாட்டு மக்கள் இவ்வளவு தூற்றுதல்களுக்கும் தகுதியானவர்கள்.

இந்நாட்டு மக்கள், எங்கேயோ பிறந்து, எங்கேயோ வளர்ந்து யாருக்காகவோ உழைத்த மகாத்மாக்களை அறிவார்கள். ஆனால் இந்நாட்டிலே பிறந்து, இந்நாட்டிலே வளர்ந்து, இந்நாட்டிலே ஓய்வின்றி உழைக்கும் தலைவர் பெரியாரின் பெருமையை உணர மாட்டார்கள். கண்காணாத நாட்டில் தோன்றிய காரல் மார்க்சைப் புகழ்வார்கள்: என்றோ மாண்டுமடிந்துவிட்ட ரூசோவை எண்ணி எண்ணி கண்ணீர்விட்டுக் கதறுவார்கள். நம் நாட்டிற்கொரு சாக்ரட்டீஸ் தேவை; நமக்கொரு கமால் தேவை; நமக்கொரு மாஜினியும், கரிபால்டியும் தேவை; அவர்களெல்லாம் இல்லையே! என்று எங்கெங்கோ மூலைமுடுக்குகளுக்கெல்லாம் சென்று 'கோ' வெனக் கதறி தேம்பித் தேம்பி அழுவார்கள்.

ஆனால், இந்நாட்டு லெனினை, தென்னாட்டு மார்க்சை, திராவிடத்தின் தந்தையை, புரட்சியின் சின்னத்தை, எழுச்சியின் வித்தை, தியாகத்தின் சிகரத்தை, வாழ்வின் வழிகாட்டியை, புத்துலகின் சிற்பியை, அறியாமையின் சம்மட்டியை, பகுத்தறிவுப் பகலவனை, குமுறும் எரிமலையை, ஆர்ப்பரிக்கும் அலைகடலை, அறிவின் எல்லையை, உழைப்பின் உருவை-ஆம், பெரியார் ஈ. வெ. ராவை-அறிய மாட்டார்கள். அவரின் ஒப்பற்ற பெருமையை உணர மாட்டார்கள் அவரும், அவரின் உயர்ந்த உள்ளத்தின் பிரதிபலிப்பாகிய திராவிடர் கழகமும் இந்நாட்டிற்கும்-இந்நாட்டு மக்களுக்கும் செய்திருக்கும் தொண்டின் பலனை சிந்தித்து அறியமாட்டார்கள்:

நாம் இருபது வருடங்களாகக் கூறுகிறோம். அழகாக, ஆணித்தரமாக, தக்க ஆதாரங்களோடு, சரித்திர ஏடுகளைப்

புரட்டிக் காட்டி, அறிஞர்களின் அபிப்பிராயங்களைத் தொகுத்துக்கூறி கூறுகிறோம்-நாம் திராவிடர், நம்முடைய மொழி திராவிட மொழி, நம்முடைய நாடு திராவிட நாடு, நம்முடைய கலை திராவிட கலை, நம்முடைய நாகரீகம் திராவிட நாகரீகம்' - என்று. எத்தனை மக்கள் இதனை ஏற்றுக்கொண்டனர்? ஏற்றுக்கொண்டு, எத்தனை மக்கள் நமது ஐக்கிய இன உணர்ச்சியின் கீழ் ஒன்றுபட்டனர்? எத்தனை மக்கள் நாம் கூறியவைகளைச் சிந்தித்துச் சிந்தித்து முடிவைக் கண்டனர்?

படித்தறியாத பாமர மக்கள் சிந்திக்க வேண்டாம்; பல்லிளித்துப் பார்ப்பனீயத்திற்குப் பாதம் தாங்கும் பிற்போக்காளர்கள் சிந்திக்க வேண்டாம்' அறியாமை அந்தகாரத்திலே, மாதா கோயிலின் மணியோசையிலே, கொர்ப்பாகிரக இருளிலே, வௌவால்கள் வட்டமிட்டுத் திரியும் இருண்ட மணிமண்டபங்களிலே, உடுக்கையின் ஒலியிலே, ருத்ராட்சத்தின் எண்ணிக்கையிலே தமது வாழ்வுப் பாதையை வகுத்துக் கொள்ளும் வகைகெட்ட வக்கிரகங்கள் சிந்திக்க வேண்டாம்; புரோகிதனின் புன்சிரிப்புக்கும், அதிகார வர்க்கத்தின் அணைப்புக்கும் ஏங்கித் தவங்கிடக்கும் எத்தர்கள் சிந்திக்க வேண்டாம்.

ஆனல், இந்நாட்டின் வழிகாட்டிகள் சிந்திக்க வேண்டாமா? அரசியலிலே ஆங்கிலேயனை அடித்து விரட்டிய தேசீயத் தோழர்கள் சிந்திக்க வேண்டாமா? டயரின் பரம்பரைக் கும்பலை சவக்குழியில் புதைத்து அதன் மேல் நினைவுச் சின்னம் நட்ட காங்கிரஸ் தோழர்கள் சிந்திக்க வேண்டாமா? பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலே சூரியனே அஸ்தமிக்காது' என்று மற்ற நாட்டினர், தன்னை பெருமிதத்தோடு கூற வேண்டும் என்று நினைத்த அதன் ஆசை

யிலே மண்ணடித்த அரசியல் வீரர்கள் சிந்திக்க வேண்டாமா? கல்கத்தா இருட்டறைச் சம்பவத்தைக் காரணம் காட்டி, மீர்ஜாபரை மிரட்டி ஒமிச்சந்தை ஏய்த்து ராபர்ட் க்ளைவ் கட்டிய ஆங்கிலேய சாம்ராஜ்யக் கோட்டையை மண்ணோடு மண்ணாக இடித்துத் தள்ளி தூள் தூளாக்கிய புரட்சி வீரர்கள் சிந்திக்க வேண்டாமா?

அமெரிக்க நாட்டிலே வாஷிங்டனால் வெளியேற்றப் பட்டபோதும் ஒழிக்கப்படாத ஆங்கிலேயத்தை, சீன நாட்டிலே சன்யாட்சனால் வெளியேற்றப்பட்டபோதும் ஒழிக்கப்படாத ஆங்கிலேயத்தை, எகிப்து நாட்டிலே ஜாக் லூல்பாஷாவினால் வெளியேற்றப்பட்டபோதும் ஒழிக்கப் படாத ஆங்கிலேயத்தை,ஸ்காட்லண்டிலே வில்லியம்வாலே சுக்குத் தம்பி ராபர்ட் புரூசினால் வெளியேற்றப்பட்ட போதும் ஒழிக்கப்படாத ஆங்கிலேயத்தை, அயர்லாந் திலே மைக்கேல் காலின்சினாலும் ஏமன் டிவேலராவினா லும் வெளியேற்றப்பட்டபோதும் ஒழிக்கப்படாத ஆங்கி லேயத்தை இந்நாட்டிலே-ஏழை இந்தியாவிலே-மகாத்மா வின் ஆத்ம சக்தி ஒன்றையே துணையாகக் கொண்டு அகிம்சா போர் புரிந்து ஒழித்துவிட்டோம்! அதன் ஏகாதிபத்திய வெறியை சவப்பெட்டியில் வைத்து ஆணி அடித்துவிட்டோம் என்று மேடை அதிர கர்ஜனை புரியும் திராவிட தேசீயத் தோழர்கள் சிந்திக்கவேண்டாமா? நாட்டின் முதுகெலும்புகளாகிய துன்பத்திலே பிறந்து, துன்பத்திலே வளர்ந்த தொழிலாளத் தோழர்கள் சிந்திக்க வேண்டாமா?

சிந்திக்காவிட்டாலும் போகிறது; சிந்தனைக்கும் செய லுக்கும் வேலை தரும் நம்மைத் தூற்றுமலாவது இருக்க

வேண்டாமா? எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் 'எதிர்ப்பு' என்ற முள் தைக்க, தைத்த முள்ளைப் பிடுங்கி எறிந்துவிட்டு, ஒழுகும் ரத்தத்தை ஒரு கையால் துடைத்துவிட்டு 'போரிடு அல்லது சாவு' என்ற புது மொழியை மனதிலே எண்ணி, லட்சியத்தை நினைத்துத் தலைநிமிர்ந்து செல்லும் நமக்கு மேலும் மேலும் தடைகள் கொண்டுவந்து நிரப்பாமலாவது இருக்கவேண்டாமா? ஒருவனுக்கு நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாமலிருக்க வேண்டாமா?

நம்மோடு அவர்கள் ஒத்துழைக்க வேண்டாம்; ஒன்றுபட வேண்டாம். ஆனால் நமது உற்சாக உள்ளத்தை ஒடிந்த உள்ளமாக மாற்றாமலாவது இருக்க வேண்டாமா?

நம்முடைய நாடு திராவிட நாடு, மூவேந்தர்கள் ஆண்ட நாடு, அறியாமையிடம் அடைக்கலம் புகாத நாடு பொன்னும் மணியும் புதுப்புது விதமாக அயல்நாடுகளுக்குச் சென்று குவித்த நாடு, அயல் நாட்டிற்குச் சென்று தமது ஆற்றலை மதியா மன்னர்களை அடக்கி அவர்கள் தலையிலே அருங்கல்லைக் கொண்டு வந்த சேரன், செங்குட்டுவன் வழிவந்த நாடு; இரும்புப் பெட்டியில் இருக்கும் எண்பது லட்சத்தையும், கரும்புத் தோட்டத்தில் வந்த கணக்கற்றப் பொருள்களையும் எண்ணிப்பார்க்கச் சொல்லி தன் ஆளுக்குக் கட்டளையிட்டுவிட்டு 'பாழுலகம் பொய்யே பரமபதம் போடா' மாயனார் குயவன் செய்த மண்ணு பாண்டம் ஓடடா' என்று வேதாந்தம் பேசாத நாடு. அப்படிப்பட்ட நம் ஒப்பற்ற நாடு ஆரியத்தினால் அலக்கழிக்கப்பட்டுவிட்டது. வருணாசிரம பேதங்களி

னல் வழுக்கி விழுந்து விட்டது. தர்பைப் புல்லின் உதவி யினல் தகர்த்தெரியப்பட்டுவிட்டது.

என்றெல்லாம் கூறினோம்-கூறுகிறோம். கிடைத்த பரிசுகள்-இன்னும் கிடைத்துக்கொண்டு வரும் பரிசுகள் மதுரைக் கலவரங்கள், தழும்புகள் நிறைந்த உடலம், கல வரமடைந்த பொதுக்கூட்டம் இவைகளே.

ஆனல், நம் இயக்கக் கொள்கைகளுக்கு மாறுபட்ட எண்ணம் கொண்ட **தோழர் ஜவஹர்லால் நேரு** கூறு கிறார் - நம் திராவிட நாட்டைப்பற்றியும், ஆரிய இனத்தின் அட்டூழியங்களைப் பற்றியும்-இதோ, படியுங்கள்.

......ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு ஆயிரம் வருஷங் களுக்கு முன்னரே இத்தேசத்தில் திராவிடர்கள் வசித்து வந் தார்களென்றும் அதிக நாகரீகம் படைத்திருந்தார்களென்றும் நமக்குத் தெரியவருகிறது. அவர்கள் அன்னிய நாட்டினரோடு வியாபாரம் செய்து வந்தனர். மெஸபோடேமியாவுக்கும் எகிப் துக்கும் தங்கள் சரக்குகளை அனுப்பி வந்தார்கள். முக்கியமாக கடலைத்தாண்டி அரிசி, மிளகு போன்ற வாசனைத் திரவியங்கள் வீடு கட்டத் தேக்கு மரங்கள் இவற்றையும் வியாபாரம் செய்து வந்தார்கள்...... பக்கம் 127

..... அக்காலத்தில் இந்தியாவில் வசித்து வந்தவர்களுக்கு திரா விடர்கள் என்று பெயர். இப்பொழுது சென்னையைச் சுற்றி வசிக்கும் ஜனங்களெல்லோரும் இத்திராவிடர்களின் சந்ததிகளா வார்கள்......... ப. 165 166

......ஆரியர்கள் ஏறக்குறைய ஐந்து அல்லது ஆறுயிரம் வருஷங் களுக்கு வெகுகாலத்திற்கு முன்னதாகவே இந்தியாவுக்கு வந் திருக்க வேண்டும். ஆனல், அவர்களெல்லாம் ஒரே தடவை யில் ஒரே கூட்டமாக வரவில்லை. படை படையாகவும், கூட்டம் கூட்டமாகவும், குடும்பங் குடும்பமாகவும்

பல நூற்றாண்டுகளில் இந்த ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்திருக்க வேண்டும். தங்கள் பண்டங்களை வண்டிகளிலோ அல்லது மிருகங்களின் முதுகிலோ ஏற்றிக்கொண்டு இவர்கள் கூடிய பெருங்கூட்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாக இந்தியாவில் நுழைந்ததை நினைக்க எவ்வளவு விந்தையாக இருக்கிறது. இக்காலத்தில் வரும் யாத்ரிகர்களைப் போன்றவர்கள் அல்லர் இந்த ஆரியர்கள். அவர்கள் வந்தால் திரும்பிப்போவது என்பது இல்லை. அவர்கள் இந்தியாவிலேயே குடியேறிச் சண்டையிட்டுச் சாவதற்கும் தயாராக வந்தார்கள். அவர்களெல்லாம் நான் முன் கூறிய வடமேற்குக் கணவாய்களின் வழியாக வந்தவர்கள்... கடிதம் 30. பக்கம் 170-171

......தாங்கள் மேலானவர்கள் என்ற கர்வத்தால் ஆரியர்கள் இந்தியாவில் வசித்த மற்ற ஜாதியாரோடு கலந்து கொள்ளாமல் இருப்பதற்காக பல சட்டங்களையும் விதி விலக்குகளையும் ஏற்படுத்தினார்கள். வெகு காலத்திற்குப் பின்பு இதன் காரணமாக வருண பேதங்கள் ஏற்பட்டன. இக்காலத்திலுள்ள ஜாதி, வகுப்புகளெல்லாம் இதனால் உண்டானவைகளே. இவ் வித்தியாசங்களெல்லாம் விபரீதமாக மாறிவிட்டன. பிறரைத் தீண்டுவதும் மற்றவர்களோடு சாப்பிடுவதும் பலருக்கு பயமாயிருக்கிறது......... க. 30. ப. 174

......வேதங்கள் எழுதப்பட்ட வேத காலங்களுக்குப் பிறகு இதிகாச காலம் வந்தது. மிகப் பெரிய வீரர்களின் **கதையைப்** பற்றி பெருங்காவியங்கள் இரண்டு எழுதப்பட்டமையால் அதற்கு இதிகாச காலம் என்று பெயர் வந்தது. இதிகாச காலத்தில் ஆரியர்கள் விந்திய மலைக்கு வடக்கே வட இந்தியா முழுவதும் பரவியிருந்தனர்.

......தென்னிந்தியாவில் வானரங்களின் தலைவரான அனுமான் ஸ்ரீராமனுக்கு உதவி செய்ததாக ராமாயணம் கூறுகிறது. உண்மையை உரைக்குமிடத்து இராமாயணக் கதையானது ஆரியர்கள் தென்னாட்டின் மீது படையெடுத்துச் சென்றபோது அவர்களுக்கும் (ஆரியர்களுக்கும்) திராவிடர்களுக்கும் நடந்த சண்

டையைப் பற்றிக் கூறுகின்றதென்று சொல்லலாம். திராவிடர் களில் ஒரு வகுப்பாரையே 'வானரர்கள்' என்று அழைத்தார் கள் போலும். க. 31. ப. 177

.........தென்னிந்திய பாஷைகளான, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்றவை மேற்கூறிய பலவித கூட்டங்கள் ஒன்றிலும் சேராதவை. இவைகளெல்லாம் திராவிடக் கூட்டத்தைச் சேர்ந்தவை. மிகவும் பழமையானவை. ப. 65

மேலே எடுத்துக் காட்டியிருப்பவைகள் ஜவஹர்லால் நேரு அவர்கள், தன் மகள் இந்திரா நேருவுக்கு எழுதிய கடிதத்திலுள்ள சிலவற்றை மட்டுமே எடுத்துக்காட்டியிருக்கிறேன். 'நாம் திராவிடர்' என்பதையே ஒத்துக் கொள்ளாத தேசீயத் தோழர்கள் இதற்கு என்ன பதில் கூறுகின்றனர்? 'இராமாயணம் என்பது ஆரிய-திராவிடப் போராட்டமே' என்று கூறும்போது முகம் சுளித்துப் பார்க்கும் பழமை விரும்பிகள் இதற்கு என்ன பதில் கூறுகின்றனர்? ஆரியர்களினால்தான் இந்த நாட்டிலே வேதங்களும், வருணசிரம பேதங்களும் புகுந்தன என்று கூறும்போது, ஒரு கையில் தீவட்டியும் மற்றொரு கையில் கற்களையும் கொண்டு வரும் பரந்த மனோபாவர்கள் (?) இதற்கு கூறும் பதில் என்ன; பார்ப்பன ஜவஹர் ஆரியர்களின் வரலாற்றையும், திராவிடர்களின் வரலாற்றையும், இராமாயணத்தின் வரலாற்றையும் திராவிடர் கழகத்தார் கூறுவதைப் போலவே கூறக் காரணம் என்ன? உண்மைக்கு உயர்வு கொடுத்தா? அல்லது, சரித்திர வரலாற்றைத் தெரிந்துகொண்டா? அல்லது திராவிடர் கழகத்தில் அங்கத்தினராகிவிட்டாரா? அல்லது அவரும் வகுப்புத் துவேஷியாகிவிட்டாரா?

இராமாயணம் என்பது 'ஆரிய திராவிடப் போராட்டமே' என்று மிக அழகாகவும் நிதானமாகவும் கூறுகிறார், இந்தியாவின் பிரதமர். எப்படிப்பட்ட வார்த்தை இது? சுலபமாகக் கூறிவிட்டார் இதனை, ஆனால் இந்த வார்த்தையை ஒளியிழந்த இந்த நாட்டிலே பரப்ப எவ்வளவு மேடைகள் நமக்குத் தேவைப்பட்டன! எவ்வளவு பொதுக்கூட்டங்கள் நடத்தவேண்டியிருந்தது! எவ்வளவு எதிர்ப்புகளைச் சமாளித்தோம்! எவ்வளவு தூற்றுதல்களை ஏற்றுக்கொண்டோம்!

பெரியார் கூறினால் - எதிர்ப்பு அதையே ஜவஹர் கூறினால்-மௌனம்; அல்லது 'ஆராய்ச்சிக்காரர்' என்ற புகழ்மாலை. அவருக்கு (ஜவஹருக்கு) இவ்விதம் கூறுவது ஒரு பொழுதுபோக்கு; ஆனால், நமக்கோ, அது உயிர்ப் பிரச்னை. இதனை ஏனோ நம் தேசீயத்தோழர்கள் உணரவில்லை.

எங்கேயோ இருக்கும் படேலின் பசப்பு வார்த்தையிலே, காந்தீயத்தின் சண் சிமிட்டலிலே, புலாபாய் வீசிய புன்முறுவலிலே, காமராஜின் கடைக்கண் வீச்சிலே, வல்லத்தரசின் வெல்லப்பேச்சிலே, ஆசாத்தின் அழகு தாடியிலே, ஜெயப்பிரகாசின் திடீர் முழக்கத்திலே மயங்குகிறார்களேயொழிய, இந்நாட்டுத் திராவிடர்த் தலைவர்கள் காட்டும் முன்னேற்ற வழியை அறிந்துகொள்ளவில்லை, அறிந்துகொள்ள முயற்சிக்கவுமில்லை.

# 3

வீரன், உருவிய வாளுக்கு 'இரை எங்கே' என்று கேட்பதுபோல, இன்றைய திராவிட வாலிபர்கள், தலைவர் பெரியார் ஊட்டிய இன உணர்ச்சிக்குப் 'போராட்டம் எங்கே' என்று கேட்கின்றனர். காந்தியார் கனவு கண்ட ராமராஜ்யமும், ஜவஹர்லால் கனவு கண்ட சோசியலிச் ராஜ்யமும் ஒன்றாகச் சேர்ந்து இறுகத் தழுவிக் கொண்ட தனால் பிறந்த படேலிச-நாசிச-ராஜ்யத்திலே திராவிட இனப்போராட்டத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின் றனர்.

இவ்வுணர்ச்சிகளையும், இன்றைய சூழ்நிலைகளையும் சரியான முறையிலே பயன்படுத்திக் கொள்ளவேண்டும், நம்முடைய திராவிடர் கழகத் தலைவர்கள், எந்தெந்த சமயங்களில் எவ்வெவ்விதம் நடந்துகொள்ள வேண்டும் என்று அவ்வப்போது-நாட்டிலே நடக்கும் செயல்களுக்கு ஏற்றாற்போல்-சாவகாசமாகவோ உடனடியாகவோ அரசி யல் தந்திரத்தோடு கூடிய-அதிகாரப்பூர்வமான-அறிக்கை கள் வெளியிடவேண்டும். தங்களுக்குள் இருக்கும் ஓரிரு அபிப்பிராய பேதங்களையும் நம் இயக்கத்தலைவர்கள் உதறித்தள்ளிவிட வேண்டும். இன்றைய நெருக்கடியான சந்தர்ப்பத்தை பெரியார் இருக்கும்போதே நாம் பயன் படுத்திக்கொள்ளாவிட்டால் இனி, நாம் என்றென்றும் ஆரியத்திற்கு அடிமைதான். பிறகு என்றுமே நாம் தலை தூக்க முடியாது. சூழ்நிலைகள் அவ்விதம் வளர்ந்துகொண் டிருக்கின்றன, ஏற்கனவே நாம் பல முக்கியமான சந்த ர்ப்பங்களை நம் இயக்க வள்ர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டோம்.

1. பார்லிமெண்ட் தூதுகோஷ்டி, இந்தியாவின் நிலைமையை அறிந்துகொள்ளவும், அதற்கு (இந்தியா வுக்கு) எந்த விதமான அரசியலை நிர்ணயிக்கலாம் எனப் பரிசீலனை செய்யவும் இங்கு வந்தபோது, நாம், அவர்க ளிடம் நம் இயக்கத்தின் திட்டங்களையும் கொள்கைகளை யும் எடுத்துக் கூறத் தவறிவிட்டோம்.

2. இரண்டாவது முறையாக மந்திரிசபை தூது கோஷ்டி இந்திய அரசியலை வகுக்க இங்கு வந்தபோது அதேபோல நமது எதிர்ப்புகளையும், லட்சியங்களையும், தென்னிந்தியாவுக்கும் வட இந்தியாவுக்கும் இருக்கும் அடிப்படையான வேற்றுமைகளையும், அவர்களிடம் எடுத்துக்கூறி அறிவுறுத்த மறந்துவிட்டோம். அதோடு திராவிடர் கழகத்தைக் கலந்துகொள்ளாமல் செய்யப் படும் எந்தவிதமான முடிவும் திராவிடத்தைக் கட்டுப் படுத்தாதென எச்சரிக்கைசெய்யவும் மறந்துவிட்டோம்

3. நம்மைக் கலக்காமல் அரசியல் நிர்ணய சபை கூடிய அன்றைய தினத்திலிருந்தே நமது இயக்கத் தைப் பலப்படுத்தி எதிர்ப்புப் போரை ஆரம்பிக்காமல் விட்டுவிட்டோம்.

இம் மூன்று சந்தர்ப்பங்களையும் நாம் நழுவவிட்டு விட்டோம். சீமையிலிருந்து இங்கு இறக்குமதியான பறங்கிப் பயல்களையும், இங்கிருக்கும் சர்மாக்களையும், சாஸ் திரிகளையும் மதித்த அளவுகூட நம் இயக்கத்தையோ அல்லது நம் இயக்கத் தலைவர்களையோ மதிக்கவில்லை; 'இனம் இனத்தோடு' என்பதை நிரூபித்துக் காட்டிவிட்ட னர். பார்ப்பன குண்டர்களில் சிலர் மேற்படி வெள்ளை யர்கள் நம்மைச் சந்திக்காமல் இருக்க என்னென்ன சூழ்ச்

சிகள் செய்யவேண்டுமோ அவைகளையெல்லாம் செய்து வெற்றிபெற்றுவிட்டனர். நாமும் வலியசென்று மேற்படி சம்பவத்தைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறிவிட்டோம்.

எப்பொழுதுமே சந்தர்ப்பங்களும் அனுசரணையான சூழ்நிலைகளும் நம்மைத் தேடிவராது. நாமாகவே அவை களை உண்டாக்கிக்கொள்ள வேண்டும். அப்படியிருக்க, தாமாகவே வந்த சாதகமான சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொள்ளாது விட்டுவிட்டது ஒரு பெரிய ஏமாற்றத்தின் எல்லையை அடைந்துவிட்டோம் என்பதே இன்றைய திராவிட வாலிபர்களின் எண்ணம்.

இதுவரையில் பொதுமக்களின் எதிர்ப்புகள, ஆரியர்களின் எதிர்ப்புகள், காங்கிரஸ் தோழர்களின் எதிர்ப்புக்கள் ஆக, இம்மூன்று எதிர்ப்புகளையும் தவிற, வேறு எவ்வித எதிர்ப்புமின்றி - அதாவது அரசாங்கத்தா ரின் எதிர்ப்பு இன்றி - வளர்ந்துகொண்டே வந்த நமது இயக்கம் இன்று, ஒரு முக்கியமான கட்டத்தில் வந்து நிற் கிறது. கம்யூனிஸ்டுகளை அடக்கியொடுக்கிய அதிகார வர்க்கத்தின் கழுகுப் பார்வை இன்று திராவிடர் கழகத் தின் பக்கம் திரும்பி இருக்கிறது. தொழிலாளர்களின் மேல் குண்டுகளை வீசி வீசிப் பழக்கப்பட்ட துப்பாக்கிக் கரங்கள் இன்று நமது மார்புக்கு நேரே நிமிர்ந்துகொண் டிருக்கிறது. நம்மைச் சூழ்ந்து நிற்கும் குள்ளநரிகளும், ஓநாய் கூட்டங்களும், ஒவ்வொரு வினாடியும் நம்மைக் காட்டிக் கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கின்றன. துப்பாக்கியின் தோட்டாக்கள் ஒவ்வொரு நிமிஷமும் நமது ரத்தத்தை ருசி பார்க்கக் காத்துக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு இமைப்பொழுதும் அதிகார வர்க்கத்தின்

R34 N48

கோர இரும்புச் சங்கிலிகள் நம்மைக் கட்டிப்பிடித்து இறுக அணைத்துக்கொள்ளத் தயாராக இருக்கின்றன. சிறைச்சாலையின் பயங்கரமான இருண்ட அறைகள், அதன் முரட்டுக் கம்பிகள் நம்மைப் பார்த்துப் பார்த்து சதா புன்னகை புரிந்துகொண்டிருக்கின்றன,

இதே சமயத்தில்-ஆம் மகிழ்ச்சி அடையத்தான் வேண்டும்-நமது எதிர்ப்பு முன்னணிப்படை கலகலத்துப் போயிருக்கிறது. அதன் அணிவகுப்புகள் நாலாபக்கங் களிலும் சிதறி ஓடி,

காங்கிரஸ் கட்சியென்றும்,
ஆச்சாரியார் கோஷ்டியென்றும்,
பிரகாசம் கோஷ்டியென்றும்,
கம்யூனிஸ்ட் கட்சியென்றும்,
சோசியலிஸ்ட் கட்சியென்றும். 108678
இந்துமகாசபை யென்றும்,
ராஸ்ட்ரீய ஸ்வயம் ஸேவக் சங்கமென்றும்,
பிராமண சேவா சங்கமென்றும்,

தனித்தனி குழுவாக நின்று பெருமூச்சு விட்டுக்கொண் டிருக்கிறது. பழைய கால புராணங்களிலேதான் இது போல உண்டு: முருகனது வேலுக்குப் பயந்து ஓடிய சூரன், மானாக மாறுவான்; பின், மரமாவான்; செடியா வான்; கொடியாவான்; பாம்பாவான்; பழமாவான்; பன்றியாவான்! கடைசியாக எதிலும் தப்பமுடியாது என்று தெரிந்தவுடனே பழைய சூரனாகிவிடுவான். உடனே முருகனது வேல், அவனது உடலை இரு பிளவா கப் பிளந்து அவனைக் கொன்றுவிடும். அதைப்போலவே தான் இன்றைய பார்ப்பனீயம், தலைவர் பெரியார் விட்ட

,பகுத்தறிவு' என்ற வாளுக்குப்பயந்து மேலே கூறியபடி பலவிதக் கட்சிகளாக உருவெடுத்து, எதற்கும் தப்பமுடியாது என்று தெரிந்தவுடனே இன்று, தனது சுய உருவமாகிய பிராமணசங்கமாக மாறி நின்றுகொண்டிருக்கிறது.

இந்த நிலையில் நம் முன் நிற்கும் பிரச்னை என்ன?........ நம் கோட்டைக்குள்ளேயே அபிப்பிராய பேதங்களை உண்டாக்கிக்கொண்டு நமது ஒற்றுமையை-ஐக்கியத்தை-சிதற அடித்துக்கொள்வதுதானா? இருபது வருட காலமாக சிற்றூர் பேரூர்களுக்கெல்லாம் சென்று ஒன்று திரட்டிய இன உணர்ச்சியை உடைத்தெரிந்துவிடுவதுதானா? தாளமுத்து, நடராசனைப் பலிகொடுத்து, அதிகார வர்க்கத்தின் உயிர்த் தாகத்தைத் தணித்து வளர்த்த நம் இயக்க வளர்ச்சியை விழலுக்கு இறைத்த நீராக்கிவிடுவது தானா? இல்லை....இல்லை!....பின் என்ன செய்யவேண்டும்? நமது ஐக்கிய முன்னணிப்படையை இரும்புக் கோட்டையாக மாற்றவேண்டும். சமய சந்தர்ப்ப வாதிகளும், பட்டம் பதவிப் பித்தர்களும், சுயநல வௌவால் கூட்டங்களும், பிணந்தின்னும் நரிக் கூட்டங்களும் உள்ளே நுழைய முடியாதபடி 'கட்டுப்பாடு' என்னும் அரண் அமைக்க வேண்டும்.

இன்று நம் இயக்க அணியைப் பிளந்துகொண்டு; இயக்கத்தை அரித்துக் குட்டிச்சுவராக்கும் ஒரு சில கரையான்களும், தலைவர் பெரியார் அவர்களை 'தான்தோன்றித் தலைவர்' என்றும், 'கட்டுப்பாட்டுக்கு அடங்காதவர்' என்றும், 'பிடிவாதக்கார சர்வாதிகாரத் தலைவர்' என்றும் தூற்றிய சில பொதிமாடுகளும் நமது இயக்கத்தினுள் புகுந்துவிட்டனர் என்பதும் உண்மைதான். அந்த சமய

சந்தர்ப்பவாதிகள் அனைவரும் நம் இயக்கத்திலேயே ஒன்றுபட்டுவிடவேண்டும்! இன்றேல், இயக்கம் அவர்களின் மேல் தகுந்த நடவடிக்கை எடுத்து அவர்களைக் கட்சியிலிருந்தே வெளியேற்றிவிட வேண்டும்; இந்தவிதமான சந்தர்ப்பவாதிகள் எந்த இயக்கத்திற்கும் லாயக்கில்லாதவர்கள். நாட்டை அழிவுதேவனிடம் காட்டிக்கொடுப்பவர்கள். எனவே இவர்களின்மேல் எப்பொழுதுமே நம் இயக்கம் தனியாக ஒரு கண் வைத்திருக்க வேண்டும்.

நீண்டகாலமாக அசட்டை செய்துவந்த ஒரு முக்கியமான செயலை நாம் இப்பொழுது உடனடியாகச் செய்ய முயல வேண்டும். ஆந்திராவிலேயும், மலையாள நாட்டிலேயும், கன்னட நாட்டிலேயும் நம் இயக்கத்தைப் பரப்ப வேண்டும். அந்தந்த நாடுகளிலேயுள்ள திறமை மிகுந்த சொற்பொழிவாளர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி, அவர்களை முழுநேரத் தொண்டர்களாக நியமித்து, அவரவர்கள் நாட்டிலே பிரசாரம் செய்ய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஆங்காங்கே நம் இயக்கத்தின் கிளைக் கழகங்களை ஸ்தாபிக்கச் செய்யவேண்டும். இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்ப அந்தந்த நாட்டிற்கு அந்தந்த மொழிகளில் பத்திரிகைகள் நடத்தவேண்டும். பதிப்பகங்களை உண்டாக்கவேண்டும். இவ்விதமெல்லாம் செய்தால் தான் பதுங்கியும், பாய்ந்தும், பல்லிளித்தும், கோர பற்களைக் காட்டியும் பயமுறுத்தும் பார்ப்பனீயம் அடங்கி ஒடுங்கி ஒடும். இன்றேல், அதன் ஆட்சி, அது இயற்றிய இராமாயணத்தின் அனுமார் வால்போல வளர்ந்து கொண்டேதான் போகும்.

இந்த சமயத்தில், நம் இயக்கத் தலைவர்களும், வேறு பல திராவிடத் தலைவர்களும் தங்களுக்குள் இருக்கும் பிணக்குகளையும், அபிப்பிராய பேதங்களையும் சவக்குழி தோண்டிப் புதைத்துவிட வேண்டும். அபிப்பிராய பேதங்களை உதறித் தள்ளியபின் நாட்டின் நிலையை நிர்ணயிக்க அவர்கள் அனைவரும் ஒன்றுகூடவேண்டும்.

அபிப்பிராய பேதம் சாதாரணமானதுதான்; ஆனால் பயங்கரமானது! மணமுள்ள மலர் இருக்கும் ரோஜாச் செடியில் குத்தும் முட்கள் இருப்பதில்லையா! அதைப் போல. அயர்லாந்தின் சுதந்திரத்திற்காக ஆங்கிலேயரோடு போரிட்ட மைக்கேல் காலின்சுக்கும், ஏமன் டிவேலராவுக்கும் ஏற்பட்ட அபிப்பிராய பேதம், மைக்கேல் காலின்சின் உயிரைக் குடித்த பின்தான் தீர்ந்தது. கப்பலோட்டிய தமிழனுக்கும் காங்கிரசுக்கும் ஏற்பட்ட அபிப்பிராய பேதம் வ. வு. சி. யை அரசியல் வாழ்க்கையிலிருந்தே விலக்கி அவரின் கட்டையோடுதான் தீர்ந்தது. காந்தியாருக்கும் கண்காணாத நாட்டிற்கு சென்று படை திரட்டிய சுபாசுக்கும் ஏற்பட்ட அபிப்பிராயபேதம், சுபாசின் உருத்தெரியாமல் கொண்டுபோய் அழுத்திய பின்தான் தீர்ந்தது. ஹிம்சைக்கும் அஹிம்சைக்கும் ஏற்பட்ட அபிப்பிராய பேதம் பகவத்சிங்கை தூக்குமேடையிலே ஏற்றி கைகொட்டிச் சிரித்த பின்தான் தீர்ந்தது. அபிப்பிராய பேதங்களினால் ஏற்படும் பயங்கரச் செயல்கள் இவை. ஆனால் இதே அபிப்பிராயபேதம் நியாயமான— ஆற்றலுள்ள — ஆச்சரியப்படும்படியான செயல்களையும் செய்திருக்கிறது.

ஒரு காலம் இருந்தது, காங்கிரஸ் 'மதுவிலக்கு' என்றவுடனே ஆயிரக் கணக்கான தென்னை மரங்கள் பெரியார் ஈ. வெ. ராமசாமியின் தோட்டத்திலே மடமட வென வெட்டப்பட்டு கீழே விழுந்த காலம்!

ஒரு காலம் இருந்தது, காங்கிரஸ் 'புரட்சி' என்ற வுடனே நூற்றுக் கணக்கான ரகசிய சங்கங்களின் சார் பாக தோழர் எம். என். ராய் ஆங்கிலேயத்தை அடித்து விரட்ட ஆயுதம் கொண்டு வர ஜெர்மனிக்குச் சென்ற காலம்!

ஒரு காலம் இருந்தது, காங்கிரஸ், 'வெள்ளையனே! வெளியே போ? என்றவுடனே, 'வெள்ளையர்களை வெளி யேற்றுவதா! கூடவே கூடாது! அவர்களை இங்கேயே ஆழக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும் என்று தோழர் ஜின்னு கனல் கக்கி வீரமுழக்கம் செய்த காலம்

இன்று அத்தகைய காலமெல்லாம் எங்கே? அவை களை யெல்லாம் மாற்றியது யார்?—அபிப்பிராய பேதம்!

அன்று, சாதாரண தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்த ஈ. வெ. ராமசாமியை இன்று, திராவி டர் கழகத்தின் தந்தையாக மாற்றியது-அபிப்பிராயபேதம். அன்று, சாதாரண ஒரு புரட்சி வீரராக இருந்த எம். என். ராயை இன்று, ராடிகல் இயக்கத்தின் தலைவராக மாற்றியது அபிப்பிராயபேதம்!

அன்று சாதாரண ஜின்னுவாக இருந்தவரை இன்று பாகிஸ்தானின் கவர்னர் ஜெனரலாக மாற்றியது-அபிப்பி ராய பேதம்.

இதுபோல அபிப்பிராயபேதம், விழிப்பை உண்டாக்குப்; இன்றேல் வீழ்ச்சியைத் தரும்! பழமைப் படுகுழியைக் காட்டும்; இன்றேல் புதுமைப் பாதையை அமைத்துத் தரும்! வாழ்க்கைப் பாதையை வளமுள்ளதாக்கும்; இன்றேல், வறண்ட பாலைவனமாகவும் மாற்றும்.

ஆகவே, நம் இயக்கத் தலைவர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் அபிப்பிராயபேதமும்-நம் இயக்கத் தலைவர்களுக்கும் மற்ற கட்சித் தலைவர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் அபிப்பிராய பேதமும்-எதைச் செய்யும்-எங்கு சென்று முடியும் என்று நாம் இன்று, எப்படிக் கூற முடியும்! ஆகவே நம் திராவிடத் தலைவர்கள் தங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் அபிப்பிராயபேதங்களை நாட்டின் முன்னேற்றத்தைக் கருதியாவது விட்டுவிட வேண்டும். அவர்கள் அனைவரும், ஒன்று கூடி ஒரு சுமுகமான முடிவுக்கு வர வேண்டும்.

'மக்களின் அறியாமையிலேயும் பயத்தின் அடிப்படையிலேயுமே எழுந்தது மதம்; ஆகவே இந்த நாட்டை மத சாம்ராஜ்யமாக மாற்ற ஒருபோதும் விடமாட்டேன், என்று கர்ஜனை புரியும் ஜவஹரும், 'மதம்' மானத்திலும் சிறந்தது; உயிரினும் மேலானது; ஒழுக்கத்தின் உயிர் நாடி; உண்மையின் உறைவிடம்; மக்களை ஆத்மார்த்தத் துறைக்கு அழைத்துச் செல்லும் வழி காட்டி! எனவே, அத்தகைய ஒப்பற்ற மதத்தைக் காக்க ஒவ்வொருவரும் உயிர்போகும் வரை போரிடவேண்டும்' என்று கூறிவிட்டு மறைந்த மகாத்மாவும், தங்கள் அபிப்பிராய பேதங்களை ஒரு பக்கத்தில் ஒதுக்கித் தள்ளிவிட்டு ஒன்றுபட்டுத் தொண்டாற்றவில்லையா?

அவர்களின் தனிப்பட்ட விருப்பு - வெறுப்புகள் அரசியலிலே வந்து முட்டுவதில்லை; எனவே அவர்கள் ஒன்றுபட்டு வேலை செய்தனர் எனக் கூறலாம் சிலர். ஆனால் அவர்களின் வாதமும் தவறு.

ஆகஸ்ட் 15-ந் தேதியன்று - அதாவது காங்கிரஸ்காரர்களின் சுதந்திரத் திருநாளன்று - தோழர் ஜவஹர்லால் நேரு அவர்கள், தன் அபிப்பிராயத்திற்கு எதிராக - தன் நம்பிக்கைக்கு விரோதமான முறையிலே 'சுபவேளையிலே' விசுவாசப் பிரமாணம் எடுத்து பதவியை ஏற்றுக்கொள்ள வில்லையா? நல்ல நேரத்திலே நம்பிக்கையில்லாத ஜவஹர் பல கோடி மக்களுக்காகவும், தன் கட்சிக்காகவும், மாபெரும் சுதந்திரத்தை மனதிலே எண்ணியும் தன் கொள்கையை விட்டுக்கொடுத்து விட்டார். இதற்குத் தானே தியாகம் என்று பெயர். நாம் நமது கடமையை உணரும்போது நம்முடைய தனிப்பட்ட அபிப்பிராயங்களையும், விருப்பு வெறுப்புகளையும், சுக துக்கங்களையும், இன்ப துன்பங்களையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு தொண்டாற்றுவதற்குத்தானே தியாக உணர்ச்சி என்று பெயர்? ஆரம்பத்திலேயே அபிப்பிராயபேதம் கொண்டிருந்த காந்தியாரும், ஜவஹரும் விட்டுக் கொடுத்து ஒன்றுபட்டு வேலை செய்தபோது பல ஆயிரம் வருடங்களாக அறியாமைப் படுகுழியிலேயே வீழ்ந்து கிடக்கும் நம் நாட்டை முன்னுக்குக் கொண்டுவர, நம் நாட்டுத்தலைவர்கள் ஏன் ஒன்றுபட்டு வேலை செய்யக்கூடாது? இந்த ஒரு விஷயத்தில் மட்டும் நம் இயக்கத் தலைவர்கள், காங்கிரஸ் தலைவர்களைப் பார்த்துப் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

நம் இயக்கமானது, இதுவரையில் சென்றுகொண்டிருந்த வழியிலிருந்து மாறி, இனி வேறு வழியில் செல்ல

வேண்டும். சமுதாய சீர்திருத்தத்திற்காக இதுவரையில் நாம் வேலை செய்தது போதும். இனி அரசியலைக் கைப் பற்ற முயலவேண்டும். எந்த ஒரு நாட்டையும் வெறும் பிரசார பலத்தினுல் மட்டும் சீர்திருத்தவோ முன்னேற் றவோ முடியாது. சட்டத்தின் துணையும் அவசியம் வேண்டும். அதற்காக, சமுதாயத்தைச் சீர்திருத்தாமல் சட்டத்தை மட்டும் துணையாகக் கொண்டு நாட்டைச் சீர் திருத்த முயலுவதும் வெறும் நடுநிசிக் கனவுதான். அவ்வி தம் சீர்திருத்த முயன்ருல், பிரகாசத்தின் மந்திரிசபை யைப்போல பயனற்ற அரசியல் மாற்றந்தான் ஏற்படுமே யொழிய, பயனுள்ள செயல்களைச் செய்ய முடியாது. செய்வதற்கு மக்களும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் விடமாட்டார்கள். எதிர்ப்பு சக்திகளை ஒன்று திரட்டி திட்டங்களை சிதற அடிக்க முயற்சிப்பார் களே தவிற, திட்டங்களின் பலாபலன்களைப் பற்றி சிந்திக்க மாட்டார்கள். ஆகவே எதிர்ப்பு சக்திகளை சமாளிக்கும் அளவுக்காவது சமுதாயத்தைச் சீர்திருத்த வேண்டும். சட்டசபையிலே வந்து அமரும் மக்களின் பிரதிநிதிகளும் நாட்டின் முன்னேற்றத்தையே முதன்மை யாகக்கொண்ட முற்போக்காளர்களாக இருக்கவேண்டும்.

இன்று நமது இயக்கமாகிய திராவிடர் கழகம், செய் திருக்கும் சமுதாய சீர்திருத்தத்தொண்டானது, ஓரளவுக் காவது-எதிர்ப்புகளைச் சிறிதளவாவது சமாளிக்கும் அள வுக்கு-நாட்டுமக்களின் மனப்போக்கை மாற்றியிருக்கிறது. அவர்களின் உள்ளத்திலே புதுமை விதையைத் தூவி யிருக் கிறது. எனவே, இனி நாம், நமது இயக்கக் குதிரையை அரசியல் மன்றத்தை நோக்கி கன வேகமாகத் தட்டிவிட வேண்டும். பேசிவிட்டு வந்த ஊருக்கே திரும்பத் திரும்ப

போய், பேசியதையே திரும்பத் திரும்ப பேசுவதால் எவ் விதமான பயனும் ஏற்பட்டுவிடாது. நம்முடைய இந்த செயலுக்கும் இராம பஜனைக்கும் வேறு வேற்றுமை இருக்க முடியாது.

'இன்று, நமது சமுதாய சீர்திருத்தத் தொண்டை ஒரு குறிப்பிட்ட அளவைக் காட்டிலும் அதிகமாகவே செய்து முடித்தால் நாளை, நமது முன்னேற்ற வேலை சுலபமாக முடியுமே எனக் கேட்கலாம்-சிலர்; உண்மைதான். ஆனல் நம்முடைய வயதான தலைவர் பெரியாருக்குப் பிறகு நமக்குள் இன்று இருக்கும் கட்டுப்பாடும், இன உணர்ச்சியும் கூட அதன் பிறகு இருக்குமா என்பது சந்தேகம்தான். அவருக்குப் பிறகு, இந்த நாட்டிற்கு ஒரு ஒப்பற்ற மாபெரும் தலைவன் தோன்ற முடியுமா என்பதும் சந்தேகம் தான். ஆகவே, பெரியாருக்குப் பிறகும் நமது போராட்டத்தை வளர்த்துக்கொண்டுபோய் நிலை தவறி வீழ்வதைவிட அவரின் காலத்திற்குள்ளாகவே நமது போராட்டத்திற்கு ஒரு முடிவைத் தேடிக்கொள்ளு வதுதான் புத்திசாலித்தனம். அதற்கு வேண்டிய செயல் களையெல்லாம் இன்றே உடனடியாகச் செய்யவேண்டும். இன்றேல், நாம் என்றென்றும் ஆரியத்தின் அடிமைதான். நமது நாடு என்றென்றும் வடநாட்டின் சுரண்டல் பூமி தான். பெரியாருக்குப் பிறகு நமது லட்சியத்தை எங்கு தேடினும் கிடைக்காது. கானல் நீரைப் போல சென்று கொண்டேதான் இருக்கும். நாட்டுப்பிரிவினை என்பதை கனவிலும் கருதமுடியாது; கனவு கண்டோம் என்றலே கைதுசெய்யப்படுவோம். இந்நிலைமை வரும் வரையில் நாம் நமது குறிக்கோளை அடையாமல் இருப்பது கூடாது,

ஆகவே நாம் அனைவரும் இன்றே இனவாரியாக ஒன்று படவேண்டும்.

ஏகதெய்வ வணக்கத்தைக் கொண்டுள்ள முஸ்லீம் களுக்கும் சேர்த்து இந்நாட்டு திராவிடர் கழகம் உழைக் கும்போது இந்நாட்டுக்குத் தனியாக 'முஸ்லீம் லீக்' தேவையில்லை. எனவே முஸ்லீம்கள் உடனடியாகத் தங்களின் முஸ்லீம் லீக்கைக் கலைத்துவிட வேண்டும்.

தாழ்த்தப்பட்டோர்களைத் தனியாகப் பிரித்து விடா மல், தன்னுடனேயே ஐக்கியப்படுத்திக்கொண்டு அவர்க ளுக்குமாக சேர்த்து திராவிடர்கழகம் தொண்டாற்றும் போது, இந்நாட்டுத் தாழ்த்தப்பட்டோர்களுக்கு, ஒருசில சுயநல பதவிவேட்டைக்காரர்களால் சிருஷ்டிக்கப்பட்ட 'ஷெட்யூல்டு காஸ்ட் பெடரேஷன்' தேவையில்லை. எனவே ஆதிதிராவிடத்தோழர்களும் உடனடியாகத் தங் களின் பெடரேஷனைக் கலைத்துவிடவேண்டும்.

காந்தியார் கனவு கண்ட ராமராஜ்யமும், காங்கிரசின் லட்சியமாகிய இந்தியாவின் சுதந்திரமும் கிடைத்துவிட்ட தாகக் கூறப்படுகிறபடியால் இனி, இந்நாட்டிற்கு தேசீய காங்கிரஸ் தேவையில்லை. எனவே தமிழ்நாடு காங்கிரசையும் கலைத்துவிடவேண்டும்.

திராவிட நாட்டுப்பிரிவினையிலேயே தமிழ் நாட்டுப் பிரி வினை அடங்கியிருப்பதாலும், அதோடு தமிழரசு கட்சி களிலே இருக்கும் திட்டங்களைவிட முற்போக்கான திட் டங்கள் திராவிடர் கழகத்தில் இருப்பதாலும் இந்த நாட்டிற்குத் தனியாக சில தலைகனத்தப் பேர்வழிகளால்

சிருஷ்டிக்கப்பட்டு, வெறும் வெத்து வேட்டுகள் கிளப்பிக்கொண்டிருக்கும் 'தமிழர் கழகமோ, இரண்டொரு விளம்பரப் பிரியர்களால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் 'தமிழரசு கழக'மோ தேவையில்லை. எனவே, இவைகளும் அந்தந்த இயக்க நிர்வாகஸ்தர்களால் கலைக்கப்பட வேண்டும்.

'பொதுவுடமைக் கொள்கைதிசையெட்டும்சேர்ப்போம்;
புனிதமோடதை எங்கள் உயிரென்று காப்போம்'

என்று திராவிடர் கழகமானது இருபது வருடங்களாக சுயமரியாதை இயக்கத்தின் பேரால் நாட்டிலே பொதுவுடமைக் கொள்கையை முரசறைந்துகொண்டு வரும்போது, இந்த நாட்டிற்குத் தனியாக ரமணரிஷிகளையும், சங்கராச்சாரிகளையும் தொண்டாற்ற அழைக்கும் சோசியலிஸ்ட் கட்சியோ; சர்மாக்களுக்கும், சாஸ்திரிகளுக்கும் அடிவருடும் கம்யூனிஸ்ட்கட்சியோ தேவையில்லை. எனவே இவைகளும் உடனடியாகக் கலைக்கப்படவேண்டும்.

எல்லா இயக்கங்களையும் கலைத்துவிட்டு, பிறப்பால், பண்பால், நடையுடை பாவனைகளால், சிந்தனையால், செயலால் ஒன்றுபட்ட திராவிடர்கள் அனைவரும், வானிடைப் பறக்கும் கறுங்கொடியின் கீழ் அணிவகுத்து நிற்கவேண்டும். தங்களின் ஏகோபித்தக் குரலை எழுப்பி பொதுஜன் சக்தியை ஒன்றுதிரட்ட வேண்டும். குறிக்கோளை அடைய பெரியாரின் தலைமையின்கீழ் தலைநிமிர்ந்துசெல்லவேண்டும்.

# 4

பெரியார் காலத்திலேயே, நாம் நமது லட்சியத்தை அடையத் தவறிவிட்டால், அதன் பிறகு இந்த நாடு எவ்வளவு தூரம் அழிவுப்பாதையில் தலைநிமிர்ந்து செல்லும் என்று இன்று கூறமுடியாது. அமெரிக்காவின் பழங்குடி மக்களாகிய செவ்விந்தியர்கள், இன்று எந்த நிலையில் இருக்கிறார்களோ அதைவிட, தென்னாப்ரிக்காவின் நீக்ரோக்கள் எந்த நிலையில் வாழ்க்கை நடத்துகிறார்களோ அதைவிட கேவலமான நிலைமைக்குப் போகத்தான் போகிறார்கள். இந்தோசீனாவின் நிர்வாண வனவாசிகள் கூட இவர்களைக் கண்டு வெட்கித் தலைகுனியத்தான் போகிறார்கள். சீன நாட்டு மக்களைவிட கொடூரமாக ஒருவரை ஒருவர் கொன்று குவித்துக்கொள்ளத்தான் போகிறார்கள். சொந்த நாட்டிலேயே, பிற இனத்தவனால்-ஒண்ட வந்த ஒரு கூட்டத்தினரால்-தனக்கென ஒரு சிறு நிலம் கூட 'சொந்த நாடு' என்ற பெயரால் இந்த உலகத்திலேயே இல்லாத-இந்நாட்டு ஆரியக்கூட்டத்தைப் போன்ற-ஒரு நாடோடிக் கும்பலால் - யூதர்களால் - அடித்து விரட்டப்படும் பாலஸ்தீன மக்களைவிட கொடூரமாக, இந்நாட்டு ஆரியக் கூட்டத்தினால் துரத்தப்படத்தான் போகிறார்கள். அதன் அறிகுறிகள் இதோ இன்றே தெரிகிறது. தர்ப்பைப் புல்லைப் பிடித்த கையில் இன்று ரிவால்வார் காட்சியளிக்கிறது. பஜனை மடங்கள் பார்ப்பனர்களின் பாசறைகளாக மாறிவிட்டன. இன்று இல்லாவிட்டாலும் நாளை, இந்நாடு நாயினும் கேடாய் நலியத்தான் போகிறது.

இந் நிலைமைக்குச் செல்லப்போகும் திராவிடத்தைக் கண்டு நாம் பார்த்துக்கொண்டிருப்பதா ? மனம் சகித்துக்

கொண்டிருப்பதா? சிங்கங்கள் ஆட்சிபுரிந்த நாட்டை செந்நாய்களும், சுண்டெலிகளும் ஆட்சிபுரிவதா? 'என் மகன் போரில் புறங்காட்டி ஓடியிருப்பானேயாயின் அவனுக்குப் பாலூட்டிய என் மார்பினை அறுத்தெறிவேன்' என்று வீரமுழக்கம் செய்த வீரமங்கையின் வழிவந்த நாட்டை, தனது துப்பாக்கியில் குண்டு இருக்கும் வரையில், மக்களை மாக்களாகக் கருதி பஞ்சாபிலே ஆயிரக் கணக்கான மக்களை சுட்டுப் பொசுக்கி, வைர வாள் பரிசு வாங்கிய டயரின் முன்னோர்கள் கும்பலுக்குக் காட்டிக் கொடுத்த ஓமிச்சந்துகளிடம் ஒப்படைப்பதா? குன்றாத வனப்பும், குறையாத செல்வமும், அழியாத கீர்த்தியும் அடைந்து, அன்பையே அரணாகக்கொண்டு ஆண்ட அரசர்கள் வழிவந்த நாட்டை, தன் நாட்டின் சுதந்திரத்திற்காகப் போரிட்ட வில்லியம் வாலேசின் உடலை, அணு அணுவாக, அங்குலம் அங்குலமாக வெட்டிச் சிதைத்து, சித்ரவதை செய்து, அவனது மாமிசப் பிண்டங்களை காக்கைகளுக்கும், கழுகுகளுக்கும் விருந்திட்ட இரக்கமற்ற கொடுங்கோலர்களாகிய பரங்கிப் பயல்களிடம் நாட்டைக் காட்டிக்கொடுத்த பார்ப்பன குண்டர்களிடம் ஒப்படைப்பதா? வாட்டிடும் பசிப்பிணி நாட்டைவிட்டோட வழிகாட்டும் வீரர்களிடம் ஒப்படைக்கவேண்டிய நாட்டை, காட்டிக்கொடுப்பதையே தங்களின் கலையாகவும் தொழிலாகவும் கொண்ட கங்குபட்டர்களிடம் ஒப்படைப்பதா? வேலும், வாளும் ஒளிவீசிய நாட்டிலே வெறும் மின்மினிப் பூச்சிகளின் ஒளியா? ஏடும் எழுத்தாணியும் மல்கிக் கிடந்த நாட்டிலே தர்ப்பைப் புல்லும் பஞ்சாங்கமுமா? பாசறைகள் நிறைந்திருந்த நாட்டிலே பஜனைக் கூடங்களா? முரசொலிகள் முழங்கும் நாட்டிலே, மூடத்

தனத்தின் உறைவிடமான வேதங்களின் முணுமுணுப்பு களா? கத்திகளும், கேடயங்களும் ஒன்றோடொன்று உருசி ஒலி ஒலித்துக்கொண்டிருக்கும் நாட்டிலே கண்டதே காட்சி கொண்டதே கோலமா? அறிவு மன்றங்கள் நிலவ வேண்டிய நாட்டிலே அறியாமையும் அந்தகாரமுமா? ஆடலழகிகள் ஆட்சிபுரிய வேண்டிய அரங்கங்களிலே ஆந்தையின் அலறலா? கோட்டைக் கொத்தளங்களிலே கோட்டானின் குடியிருப்பா? வீரர்கள் உலவ வேண்டிய வீதிகளிலே விபூதிப் பண்டாரங்களா? உழைப்பாளிகளுக்கு உயர்வுதரவேண்டிய நாட்டிலே உஞ்சிவிருத்திகளுக்கு உயர்விடமா? காதல் அடைதல் உயிரியற்கை என்பதை உணர்ந்திருந்த நாட்டிலே கைம்மைக் கொடுமையா? கலை மன்றங்களெல்லாம் விபசாரத்தின் விளை நிலங்களாவதா? உயிரைக் கொடுத்தேனும் மானத்தைக் காப்பதைவிட்டு, மானத்தைக் கொடுத்து உயிரைக் காத்துக்கொள்வதா?............

வேண்டாம்,....முடியவே முடியாது. திராவிடத்தை அந்நிலைக்குச் செல்ல விடமாட்டோம்! அதற்குள்ளாகவே திராவிடத்தை அழித்தே விடுவோம்! இன்றோ, நாளையோ, இப்பவோ, பிறகோ, இன்னும் சற்று நேரத்திலோ என்று ஒவ்வொரு விநாடியும் ஆபத்தோடு விளையாடிக்கொண்டிருக்கும் தலைவர் பெரியார் மாண்ட மறுநாளே இந்நாட்டை அழித்தேவிடுவோம்.

'வாழ்க வாழ்கவே! வளமார் எமது திராவிடநாடு வாழ்க வாழ்கவே!' என்று நாட்டு வாழ்த்துப் பாடிப் பார்த்துவிட்டோம்.

'மானிடம் என்னுமோர் ஆதிப்பயிர் - தமிழ் மக்க ளென்றே குதித் தாடுவோமே'—என்று நமது பண்டைய கால பெருமையை எடுத்துக்கூறி ஆனந்தம் அடைந்து விட்டோம்.

'இருட்டறையில் உள்ளதடா உலகம் - ஜாதி இருக் கின்ற தென்பானும் இருக்கின்றானே'—என்று இன்றைய திராவிடத்தின் நிலையை எடுத்துக் கூறிவிட்டோம்.

'கூடித்தவிக்கும் குழந்தை மனைவியர் கூழை நினைத் திடும் போதிலே கோயில் - வேடிக்கையாதெரு மீதிலே?— என கேள்விகள் கேட்டு சிந்திக்கச் செய்துவிட்டோம்.

'மத ஓடத்திலேறிய மக்களே! பலிபீடத்திலே சாய்ந் தீரே'—என எச்சரிக்கை செய்துவிட்டோம்.

'கொலை வாளினை எடடா மிகு - கொடியோர் செயல் அறவே' என முழக்கமிட்டுப் பார்த்துவிட்டோம்.

'குகையே வாழ் புலியே உயர் குணமேவிய தமிழா!' என உற்சாகமூட்டிப் பார்த்துவிட்டோம்.

'இல்லையே உணவில்லையே கதியில்லையே எனும் எளிமை - இனிமேலில்லை எனவே முரசறைவாய், முரசறை வாய்'—என எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையூட்டிப் பார்த்துவிட்டோம்.

'புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்' என நமது செயலையும், மன உறுதியையும் எடுத்துக் கூறிவிட்டோம்.

'ஓதலுக்கெல்லாம் மறுப்பா என்னருமை நாடே! உணர்வுகொள் எந்தன் உடலுயிரும் நீயே'—என வேண்டு கோள்விடுத்துப் பார்த்துவிட்டோம்.

'அந்த வாழ்வு தான் எந்த நாள் வரும்' — என்று தனிமையில் அமர்ந்து ஏங்கித் தவித்துவிட்டோம்.

இனி, அடுத்தது என்ன?............

இவ்வளவிற்கும் விழிப்படையாத நாட்டைக் கண்டு தான் இன்றைய திராவிட வாலிபர் கூட்டம் சலிப்படைந்து நிற்கிறது.

அதன் எதிரொலிதான் '**அழியட்டுமே திராவிடம்!**'


வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

# "புதிய திராவிடம்"

மனிதன் மனிதனாக வாழவேண்டும், இன்றேல் சாவவேண்டும் என்ற குறிக்கோளுடன் எதிர் காலத்தில் திராவிடர் நிலை எப்படியிருக்க வேண்டும் என்பதைச் சித்தரித்திருக்கிறார் ஆசிரியர்.

புதிய திராவிடத்தை அமைக்க வழிகாட்டி, எல்லோரையும் அறைகூவி அழைக்கிறார் ஒற்றுமை உலகிற்கு

**விலை 0—4—0** **கமிஷன் 100-க்கு 25%**

விபரங்களுக்கு:

**புரட்சி பதிப்பகம்,**

**துறையூர், :: திருச்சி ஜில்லா.**

# 5

# அழியட்டுமே திராவிடம்!

ஆம்! திராவிடம் அழியட்டும்! அழிந்தே போகட்டும்!

மண்ணோடு மண்ணாக மக்கி மடியட்டும்! தமிழன் ரத்தத்தைத் தமிழன் சிந்தக் கூடிய நிலைமைக்குப் பின்னேக் கிச் சென்ற திராவிடம் அழியட்டும்! தமிழனைத் தமிழன் 'தீண்டத்தகாதவன், உழைக்கப் பிறந்தவன், வகுப்புத் துவேஷி' எனத் தூற்றும் திராவிடம் அழியட்டும்! தமிழன், தமிழர் கூட்டங்களிலே, தமிழர் மாநாடுகளிலே கலவரம் செய்வதில் பெருமையடையக்கூடிய நிலைமைக்கு அறிவை யிழந்துவிட்ட திராவிடம் அழியட்டும்! தமிழன் தமிழனைக் கொன்று, அந்த பிணத்தின் மீது ஏறி நின்று பாரீர், என் பராக்கிரமத்தை! என்று கொக்கரிக்கக் கூடிய நிலைமைக்கு இன உணர்வை இழந்துவிட்ட திராவிடம் அழியட்டும்.

ஆம்! அழிந்தே போகட்டும்! வாழத் தெரியாத நாடு அழியத்தானே வேண்டும்! சிந்திக்கத் தெரியாத நாடு சிதைந்து போகத்தானே வேண்டும்! உணரத் தெரியாத நாடு உருக்குலைந்தே போகட்டும்! எவ்வளவு தூரம் எடுத்துக் கூறினாலும் ஆராய்ந்து பார்க்காத நாடு அழிந்தே போகட்டும்!

சலிப்புற்ற திராவிட வாலிப உள்ளத்தின் இன்றைய முரசொலி அல்ல இது-எதிர்கால முரசொலி. ஆனந்த மாக வீசும் தென்றல் காற்றிலே, அசைந்தாடும் கருங் கொடியின் கீழ் அணிவகுத்து நிற்கும் ஆயிரக்கணக்கான திராவிட வாலிபர்கள், எதிர்காலத்தில் முழங்கப்போகும் மரண சாசனத்தின் இறுதி கோஷம் இது. இன உணர் வின் கீழ் ஒன்றுபட்ட ஐக்கிய முன்னணிப் படையின் எதிர்கால போர்முழக்கம் இது. ஊராரின் தூற்றல், உற வினர்களின், எதிர்ப்பு குடும்பத்தினரின் தொல்லை, நண்பர் களின் வசவு, அனைத்தையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு நாட்டு நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தொண்டுசெய்யும் தியாகக் கூட்டங்களின் புரட் சிப் பாட்டு இது.

எரியுண்ட மதுரையைப்போல தீப்பற்றி எரியட்டும்; வேண்டாம் இந்த நாடு, இந்த நாட்டைச்-சீர்திருத்துவதை விட அதை அழித்துவிட்டே அதன்மேல் ஒரு புதிய சமுதா யத்தை நிறுவிடுவோம்.

பெரியாருக்குப் பிறகும் நாம் இந்தநாட்டிலே லட்சிய வாதிகளாக இருக்கவேண்டாம்! சிந்தித்துச் சிந்தித்து முடி வைக்கண்ட சிந்தனையாளர்களாக இருக்கவேண்டாம்! 'தமிழன் தமிழனைக்கொல்லும் நிலைமைக்குப் பின்னோக்கிச் செல்லக் காரணம் என்ன' என்பதைத் துருவித்துருவி ஆரா யும் தீர்க்கதரிசிகளாக இருக்கவேண்டாம்!

நெஞ்சில் கொஞ்சமும் இரக்கமற்ற சதிகாரர்களாக மாறுவோம்! அழிவுதேவனின் ஆட்களாக மாறுவோம்!

உள்ளமோ உணர்வோ இல்லாத இரக்கமற்ற அரக்கர்களாக மாறுவோம். நாட்டை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லமாட்டோம், இழுத்துச் செல்வோம்! பாலஸ்தீனத்திலேயுள்ள யூத பயங்கர இயக்கத்தைப் போல, இந்நாட்டிலே திராவிட பயங்கர இயக்கத்தை ஸ்தாபிப்போம், விஞ்ஞானத்தின் துணையை நாடுவோம். புதுப் புது விதமான நாசகாரிகளையும், ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும், விஷப்புகைகளையும் கண்டு பிடிப்போம். திராவிடமெங்கும் வெடிகுண்டுகளைப் போட்டு அழிப்போம்! திராவிட மக்கள் அனைவரையும் அழிப்போம்! மலேயாவிலே, பர்மாவிலே, சிங்கப்பூரிலே, இலங்கையிலே இன்னும் எங்கெங்கு தமிழர் சமுதாயம் இருக்கிறதோ, அங்கெல்லாம் சென்று அவர்களைக் கொன்று குவிப்போம், வேண்டாம், .... ஒரு தி ரா வி ட ன் கூட இந்த உலகத்திலேயே உயிரோடு இருக்க வேண்டாம். குமுறும் எரிமலைகளை திராவிடமெங்கும் உண்டாக்குவோம்; தீக்குழம்புகளைக் கக்கச்செய்வோம்; ஆர்பரிக்கும் அலைகடலைப் பொ ங் க ச் செய்வோம்; காட்டாறுகளை உண்டாக்கி, அவைகளில் வெள்ளத்தைக் கரைபுரண்டு ஓ ட ச் செ ய் வோம்; தென்றலைப் புயலாக மாற்றுவோம். செங்கதிர் பரப்பும் சூரியனை, கொதிக்கும் அக்கினி பிழம்பாக மாற்றுவோம், ஆடி அசைந்து வரும் தென்றலோடு கூடிக் குலவி முத்தமிட்டு மகிழும் குளிர் மலர்ச்சோலைகளும், காலைக் கதிரவனின் பொன்னொளி பட்டு பூரித்துப் பொலிவுடன் விளங்கும் பூங்கமலங்களும் கறுகிச் சாய்வதைக் கண்டு களிப்புறுவோம்; பெரிய பூகம்பங்களை உண்டாக்குவோம்;

மடமடவெனச் சாயும் மாடமாளிகைகளைக் கண்டு மனம் கொண்டமட்டும் மகிழ்வோம்; அந்த மாடமாளிகை களிலே மமதையுடன் வசித்த பிரபுக்களின் முண்டங்கள் மண்ணிலே புரளட்டும்; கோழைகளை கெஞ்சக் கெஞ்ச கொன்று குவிப்போம். எங்கும் பிணக்குவியல்களும். காணுமிடங்களிலெல்லாம் ரத்த வெள்ளமும் காட்சியளிக் கட்டும்; கடல்களிலே முண்டங்கள் கட்டைகளைப் போல மிதக்கட்டும்; கழனிகளிலே கழுகுகள் பாய்ந்துப் பாய்ந்து வட்டமிட்டுத் திரியட்டும்; பட்ட பகலிலே நடு ரஸ்தாக்க ளிலே கழுகுகளும், குள்ளநரிகளும் பிணங்களை இழுத்துச் செல்லும் காட்சியும், பிணங்களின் சதைகளைப் பிடுங்கி தின் னும் காட்சியும் குலைநடுங்கச் செய்யட்டும்.

இடிந்துபோன நாடு நகரங்களையும், அழிந்துபோன ஆலயங்களையும், பாழடைந்த பூஞ்சோலைகளையும், நசுக்கிச் செத்த குழந்தைகளையும், கண்டகண்ட இடங்களிலே கிடக்கும் பிணக் குவியல்களையும் கண்டு பெருமூச்சு விட மாட்டோம்; மாறாக, மகிழ்ச்சிகொள்வோம், தீயினால் கறுக்கப்பட்ட மாட மாளிகைகள், வெந்து சாம்பலான வாசகசாலைகள், இடிந்து விழ்ந்து கிடக்கும் பத்திரிகை அலுவலகங்கள், தூள்தூளான நாகரீகச் சின்னங்கள், உடைந்து தூள்தூள்களாகக் காணப்படும் விஞ்ஞானப் பொருள்கள், உடைந்துகிடக்கும் இயந்திர சாதனங்கள் உருத் தெரியாமல் மறைந்து போன கலைப் பொக்கிஷங் கள், மின்னும் அணிகள், மருத்துவ நிலையங்கள், உயர்ந்த

சித்திரங்கள், அழகிய பதுமைகள் இவ்வளவும் நாசமா னதைக் கண்டு, கைகொட்டிச் சிரிப்போம். ஒரு திரா விடனைக் கூட மிஞ்ச விடமாட்டோம். ஒருவனை விட்டு வைத்தால்கூட அவன் தனது அடிமை மனப்பான்மையை நன்றிகெட்ட உள்ளத்தை உலகமெங்கும் பரப்பிவிடுவான், அடிமை திராவிடத்தின் சின்னம் ஒன்றைக்கூட விட்டு வைக்க வேண்டாம்; அனைத்தையுமே அழித்துவிடுவோம்.

அழிவு வேலை முடிந்ததும் ஆக்க வேலையில் ஈடுபடு வோம். திராவிடத்திலே புது யுகத்தைப் பூக்கச் செய் வோம். மாட மாளிகைகளையும், கூட கோபுரங்களையும் திரும்பவும் கட்டுவோம், அழகான ஆறுகளையும், ஆழமான கிணறுகளையும், வெட்டுவோம். வளர்ந் தோங்கிய மரங்களையும் செழித்துக் குலுங்கும் செடிகளை யும் பயிரிட்டு வளர்ப்போம். இடர்களில்லாப் பாதைகளை யும், இன்னிசை தரும் இசை மன்றங்களையும், அறிவை வளர்க்கும் ஆராய்ச்சி நிலையங்களும், ஏற்படுத்துவோம் மணம் பரப்பும் மலர்களுள்ள மாமலர்ச் சோலைகளை படைப்போம். மாலை நேரத்தையும், அதற்கு அழகையளிக் கும் மதியையும் படைப்போம்; இரவையும் பகலையும் படைப்போம்; சிங்கத்தையும் சிறுத்தையும் படைப் போம். ஆட்டையும், மாட்டையும் படைப்போம் இன் னும் எவைஎவைகளையோ படைப்போம். ஆனல், மனிதனை மட்டும் படைக்கமாட்டோம்! அதுவும் நன்றிகெட்ட திரா விடனைமட்டும் சிருஷ்டிக்க மாட்டோம்.

மறுமலர்ச்சியடைந்த திராவிடத்திலே,

வாசகசாலைகள் இருக்கும்; ஆனால் வாசிப்போர்கள் இரார்! இசைமன்றங்களிலே இசைக்கருவிகள் எங்கேயோ ஒரு மூலையில் கிடக்கும்; ஆனால் எடுத்துமீட்டுவோர் இரார்! மானும், மதியும் இருக்கும்; அனால் அவைகளைக்கண்டு இன்புறும் காதலர்கள் இரார்! இரவும் பகலும் இருக்கும்; ஆனால் அந்த இரவென்றும் பகலென்றும் பாராமல் உழைத்துழைத்து சாகும் தொழிலாளி இருக்கமாட்டான்! மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் இருக்கும்; ஆனால் அந்த மாடமாளிகையிலே மதுக்கரங்களும், மான்விழிக்காரிகளும் இரார்! தேனிடை ஊறிய செம்பவள இதழாளும் அந்த இதழோடு இதழ் பொருத்தி, முத்தமிட்டு உறியும் போது உண்டாகும் 'இச்' சென்ற ஒலியும், ஏழை பாட்டாளி மக்களின் 'உஸ்' என்ற பெருமூச்சும், 'ஏண்டா, நாயே! கூறுகிறேன் நிற்கிறாயா?' எனக்கத்தும் காட்டுப் பன்றிகளின் கோலாகல ஒலியும், மதுக்கிண்ணம் கீழே விழும் சப்தமும், அதைத் தூக்கியெறிந்துவிட்டு மங்கை நல்லாளை அணையும்போது கேட்கும் 'களுக்'கென ஒலியும் கேளாது! எங்கும் நிசப்தம் நிலவும்; அமைதி குடிகொண்டிருக்கும்!

திராவிடத்தின் சரித்திரப் புத்தகத்தை எடுத்து ஏடுகளைப் புரட்டுவோம்: "நன்னிலைக்குச் செல்ல அழைத்த திராவிட வாலிபர்களின் பேச்சைக் கேட்க மறுத்த திராவிடத்தையும் அந்த நாட்டையும் அழித்தே விட்டனர் அந்நாட்டு வாலிபர்கள்" என எழுதிவைத்துவிட்டு நாமும் தற்கொலை செய்துகொள்வோம்! அதன்பின், ........

புதுயுகம் பூக்கும்! இரவுக்குப்பின் பகல்வரும்! அதிலே,

கதிரவன் காய்வான்
மலர்கள் மலரும்
பறவைகள் பாடும்
குயில்கள் கூவும்
மயில்கள் ஆடும்
தென்றல் வீசும்
குரங்குகள் தாவிக்குதிக்கும்
வண்டினங்கள் வட்டமிடும்

ஆனால் மனிதன் மட்டும் இருக்கமாட்டான்!

சிந்தையில் பதிந்த சித்திரத்தை சிலையாகச் செய்ய எண்ணிய சிற்பி, சிலை உருவாகாததால் உள்ளம் உடைந்து சிலையையே உடைத்தெறிந்து விடுவதைப்போல,

திருந்தாச் சமுதாயத்தைச் சீர்திருத்த, அதை அழித்தே விடுவோம்!

ஏமாற்றத்தின் எதிரொலி "உடைந்த சிலைத் துண்டுகள்!"

லட்சியப் போரில், தோல்வியைக் கண்ட சிந்தனையாளர்களின் ஏக்கம் நிறைந்த உள்ளப் பிரதிபலிப்பு "அழிக்கப்பட்ட திராவிடம்"

ஏ,........திராவிடமே! நீ செல்லப்போகும் பாதை இதுதானா? ........

---

108678

அறிஞர் சுப. நாராயணன் அவர்களி

இலக்கியச்சித்திரம்

# "விதவையின் காதல்

'தாலியறுத்து, வீட்டிலே முடங்கிக் கிடக்கு பெண்ணுக்கு உணர்ச்சி யில்லையா? நாடி நரம்புக தன் சக்தியை இழந்துவிட்டனவா? என்பன போன் கேள்விகளுக்கு பதில்............?

கைம்பெண் நாட்டிலிருக்கக்கூடாது. அவர்களு மனித இனம்தான் அவர்கள் இஷ்டப்பட்டால் கட்ட யம் திருமணம் செய்து கொடுத்தே தீரவேண்டு காரணம் கதையைப் படித்துப்பாருங்கள்.

செல்வக் குடும்பத்தில் பிறந்து, பட்டப்படிப்ப படித்துச், செல்வனை மணந்து, விதவையான, பண் பட்ட உள்ளம்படைத்த இளம்பெண், இயற்கையின் ஆற்றலை மீறமாட்டாமல், சமூக கொடுமை நிறைந் கட்டுப்பாட்டை புறக்கணித்துக் காதல் தூய்த்து, மனை வாழ்வு வாழ்ந்ததைப் பற்றிச் சொல்லுகிறா வெ அழகாக.

காதல் சுவை ததும்பும் கற்பனைச் சித்திரம்.

**எரிமலைப் பதிப்பக வெளியீடு.**

விலை ரூ. 1—0—(

தேவைக்கு எழுதுக.

விற்பனையாளர்களுக்கு கமிஷன் ரூ. 25/-

**புரட்சிப் பதிப்பகம்,**

துறையூர், : திருச்சி மாவட்டம்.


Printed at the Sri Nataraja Press, Turaiyur. 19

## எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்.

| | | |
|---|---|---|
| என் கண்ணீர் | ... | 1— 8—0 |
| அன்று இரவில் | ... | 1— 0—0 |
| கார்ல் மார்க்ஸ் | ... | 1— 0—0 |
| விதவையின் காதல் | ... | 1— 0—0 |
| கதவு திறந்தது | ... | 1— 0—0 |
| கடவுள் முளைத்தார் | ... | 0—14—0 |
| கவிஞர் பேசுகிறார் | ... | 0—10—0 |
| மீனாட்சி நாவல் | ... | 0—10—0 |
| அவள் விபசாரியா ? | ... | 0— 9—0 |
| அழியட்டுமே திராவிடம் | ... | 0— 8—0 |
| நர்சகார சமூகம் | ... | 0— 8—0 |
| பதில் கூறுங்கள் (கவிதை) | ... | 0— 8—0 |
| காமாந்தகார கடவுள்கள் | ... | 0— 8—0 |
| உலகம் உருப்படுமா ? | ... | 0— 6—0 |
| சென்னை ஷாப் சட்டம் | ... | 0— 6—0 |
| ஆரிய புல்லுருவி | ... | 0— 6—0 |
| கற்பளித்த கன்னி | ... | 0— 6—0 |
| காதல் பிறந்தது | ... | 0— 6—0 |
| அதிகார போதை | ... | 0— 6—0 |
| மதம்பிடித்த மடாதிபதிகள் | ... | 0— 4—0 |
| புதிய திராவிடம் | ... | 0— 4—0 |
| சினிமாவில் கடவுள்கள் | ... | 0— 4—0 |
| மகாத்மா காந்தி (C. N. A. பேச்சு) | ... | 0— 3—0 |

தேவைக்கு எழுதுக. :: வியாபாரிகளுக்கு 25% கழிவு உண்டு.

தனிப்பிரதி வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவும்.

விபரங்களுக்கு :

**புரட்சிப் பதிப்பகம்,**

துறையூர், திருச்சி மாவட்டம்.

Printed at the SRI NATARAJA PRESS, TURAIYUR. 1948.